தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

இன்றைய வேளாண் செய்திகள்

## நீர்வரத்து மீண்டும் அதிகரிப்பு மேட்டூர் அணை நீர்மட்டம் 67 அடியாக உயர்ந்தது



நீர்வரத்து மீண்டும் அதிகரித்ததால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் 67 அடியாக உயர்ந்தது.நீர்வரத்துஅதிகரிப்பு

கர்நாடக மாநிலத்தில் பருவமழை தீவிரம் அடைந்ததின் காரணமாக அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் ஆகிய அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இந்த தண்ணீர் கடந்த 18–ந் தேதி அதிகாலை மேட்டூர் அணையை வந்தடைந்தது. இந்த நீர்வரத்து காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்தது. ஆனால், கடந்த 4 தினங்களுக்கு முன்பு கர்நாடக அணைகளில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டதால் மேட்டூர் அணையின் நீர்வரத்தும் குறைந்து வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி வீதம் வந்தது. இந்த நிலையில் கர்நாடக அணைகளில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் மறுநாளே மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 23 ஆயிரம் கனஅடியாக

அதிகரித்தது. நீர்மட்டம் 67 அடி இந்த நீர்வரத்து கடந்த 2 தினங்களாக மீண்டும் படிப்படியாக அதிகரித்து நேற்று வினாடிக்கு 32 ஆயிரம் கனஅடியாக வந்தது. இதனால் மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்றைய நிலவரப்படி 67 அடியாக உயர்ந்து உள்ளது. நீர்வரத்து மேலும் அதிகரித்தால் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர வாய்ப்பு உள்ளது.

**மின்சார ரெயில்கள் மூலம் காய்கறிகளை கொண்டுவந்து சென்னையில் விவசாயிகள் நேரடி விற்பனை**



சென்னை, மின்சார ரெயில்கள் மூலம் காய்கறிகளை கொண்டுவந்து சென்னையில் விவசாயிகள் நேரடியாக விற்பனை செய்கின்றனர். மலிவு விலையில் தரமாக கிடைப்பதால் காய்கறிகளை வாங்குவதற்கு பொதுமக்கள் கூட்டம்அலைமோதுகிறது.

**விவசாயிகள் நேரடி விற்பனை**

காய்கறிகளின் விலை விண்ணை முட்டும் அளவிற்கு நாளுக்கு, நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. விலையேற்றம் கண்டு வருவதால் சமையலில் சுவைக்கு கூட்டு பொருளாக சேர்க்கப்படும் காய்கறிகளின் அளவையும் பெரும்பாலான குடும்ப தலைவிகள் கணிசமாக குறைத்து வருகிறார்கள். மாத பட்ஜெட்டில் துண்டு விழுந்துள்ளதால் மலிவு விலை

காய்கறிகளையும், காய்கறிகளின் விலை குறைவையும் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இவ்வாறு உள்ளவர்களுக்கு வரப்பிரசாதமாக வில்லிவாக்கம் ரெயில் நிலையம் அருகே உள்ள பெரிய காய்கறி மார்க்கெட் திகழ்கிறது. இதற்கு காரணம் கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகளே தங்கள் தோட்டத்தில் விளைந்த காய்கறிகளை சந்தைக்கு கொண்டு வந்து மொத்த விலைக்கே நேரடியாக வாடிக்கையாளரிடம் விற்பனை செய்வதுதான். விவசாயிகள் மின்சார ரெயில் மற்றும் டெம்போக்களில் மூட்டை, மூட்டையாக கொண்டு வந்து விற்பனைசெய்துவருகிறார்கள்.

**மலிவு விலையில் தரமான காய்கறிகள்**

கிராமப்புறங்களிலிருந்து விவசாயிகள் கத்தரிக்காய், வெண்டைக்காய், பாகற்காய், பீர்க்கங்காய், வாழைக்காய், சுரைக்காய், அகத்தி கீரை, சிறு கீரை, முளைக்கீரை உள்ளிட்ட காய்கறிகளை கொண்டுவருகின்றனர். இதன் விலை சில்லரையாக விற்பனை செய்வதை விடவும் சரி பாதி குறைவு ஆகும். இதனால் குடும்ப தலைவிகள், சில்லறை வியாபாரிகள் ஆர்வத்துடன் சந்தைகளில் காத்து நின்று வாங்கிச் செல்கின்றனர். வில்லிவாக்கம் பெரிய காய்கறி மார்க்கெட்டின் நேற்றைய விலை பட்டியலின்படி ஒரு கிலோ கத்தரிக்காய் ரூ.25, வெண்டைக்காய் கிலோ ரூ.25, பாகற்காய் கிலோ ரூ.25, பீர்க்கங்காய் ரூ.16, சீனி அவரைக்காய் கிலோ ரூ.25, சுரைக் காய் கிலோ ரூ.10, அரைக்கீரை, அகத்தி கீரை, முளைக்கீரை (ஒரு கட்டு) ரூ.7, வாழைக்காய் ஒன்று ரூ.6-க்கும் விவசாயிகள் விற்பனை செய்தனர்.

**குறைவான லாபம்**

சில்லரை விற்பனையாக கத்தரிக்காய் ஒரு கிலோ ரகத்திற்கு ஏற்ப ரூ.40 முதல் 35 வரையிலும், வெண்டைக்காய் கிலோ ரகத்திற்கு ஏற்ப ரூ.40 முதல் 35 வரையிலும், பாகற்காய் கிலோ ரூ.50-க்கும், பீர்க்கங்காய் கிலோ ரூ.40-க் கும், சீனி அவரைக்காய் கிலோ ரூ.40-க்கும், சுரைக்காய் கிலோ ரூ.30-க்கும், கீரை (ஒரு கட்டு) ரூ.10-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகளே தங்கள் பொருட்களை நேரடியாக விற்பனை செய்வதால் குறைவான லாபம் வைத்து விற்பனை செய்கிறார்கள். இதனால் குடும்ப தலைவிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். காய்கறி மார்க்கெட்டின் அருகே காய்கறி ஏற்றி வரும்

வாகனங்கள் வருவதற்கு வசதியாக போதுமான சாலை வசதி இல்லை. சாலை குண்டும், குழியுமாக காணப்படுவதால் வாகன ஓட்டிகள் கடுமையான அவதிக்கு உள்ளாகி வருகிறார்கள். வில்லிவாக்கம் காய்கறி மார்க்கெட்டில் காய்கறிகள் மட்டும் விற்பனை செய்யப்பட்டு வந்தது. விரைவில் புதிதாக மீன் மார்க்கெட்டும் தொடங்கப்பட உள்ளது.

**குடும்ப தலைவி மகிழ்ச்சி**

இதுகுறித்து ஆராதனா என்ற குடும்ப தலைவி கூறுகையில், காய்கறிகளின் விலை அதிகரித்து வருகின்றபோதிலும் இந்த மார்க்கெட்டில் மொத்த விலைக்கு வாடிக்கையாளர்களிடம் வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர். காய்கறிகளை பாரபட்சம் காட்டாமல் வாங்கி வருகிறோம். இதனால் சில்லறையாக வாங்குவதை விடவும் குறைவான விலையில் அதிகமான காய்கறிகளை சமையலுக்கு வாங்கிவிடமுடியும். மற்ற இடங்களை விடவும் மலிவான விலைக்கு கிடைப்பது ஆறுதலாக உள்ளது. காய்கறிகள் தோட்டங்களிலிருந்து சில மணி நேரத்திற்குள் உடனுக்குடன் சந்தைக்கு நேரடியாக விற்பனைக்கு கொண்டுவரப்படுவதால் தரம் மிகுந்ததாக பச்சை, பசேலாக உள்ளது என்றார்.

**காய்கறிகள் எங்கிருந்து வருகிறது?**

வில்லிவாக்கம் மார்க்கெட்டை சேர்ந்த வியாபாரி சீனிவாசன் கூறுகையில், அரக்கோணம், ஏராட்டுர், திருவாலங்காடு, மாரிமங்கலம், மஞ்சகுப்பம், செங்குன்றம், எளாவூர், திருத்தணி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் தாங்கள் பயிரிடும் காய்கறிகளை நேரடியாக வந்து விற்பனை செய்து வருகின்றனர். சராசரியாக நாள்தோறும் நூற்றுக்கணக்கான மூட்டைகளில் காய்கறிகள் கொண்டுவரப்படுகிறது. நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூ.5 லட்சம் வரை விற்பனையாகும். காலையில் விற்பனை செய்யும் விலையை விடவும் சில நேரம் மாலை நேரம் காய்கறிகளின் விலை குறைவாக இருக்கும். இதற்கு காரணம் விரைவில் விற்பனை செய்துவிட்டு வீட்டிற்கு செல்ல வேண்டும் என்று விவசாயிகள் கருதுவதே ஆகும். விவசாயிகளே காய்கறிகளை சந்தைக்கு வந்து நேரடியாக விற்பனை செய்வதால் மற்ற வியாபாரிகளுக்கு பாதிப்பு இல்லை என்றார்.

**கீரை விவசாயி**

செங்குன்றம் அருகேயுள்ள லட்சுமிபுரம் பகுதியை சேர்ந்த விவசாயி வடிவேல் கூறுகையில், நான் 20 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் அரைக்கீரை, முளைக்கீரை, சிறு கீரை உள்ளிட்ட கீரை வகைகளை பயிரிட்டுள்ளேன். நாள்தோறும் சராசரியாக சந்தைக்கு ஆயிரம் கட்டு கீரைகளை விற்பனைக்காக கொண்டு வருவேன். சந்தைக்கு கொண்டுவரும் கீரைகள் மூலமாக போக்குவரத்து கூலி உள்பட பல்வேறு கூலி போக நாளுக்கு ரூ.5 ஆயிரம் எனக்கு வருமானம் கிடைக்கும். வாடிக்கையாளர்களுக்கு மலிவான விலையில் கீரைகளை விற்பனை செய்து வருகிறேன் என்றார்.

**பலத்த காற்றுடன் மழை பெய்வதால் ஆழியாறு அணையில் படகு சவாரி நிறுத்தம்**




ஆழியாறு அணை பகுதி யில் பலத்த காற்றுடன் மழை பெய்து வருவ தால் படகு சவாரி நிறுத் தப்பட்டுள்ளது.ஆழியாறு

ஆனைமலையை அடுத் துள்ள ஆழியாறு புகழ்பெற்ற சுற்றுலா மையமாக திகழ்ந்து வருகிறது. இங்கு ஆழியாறு அணை, பூங்கா, குரங்கு நீர் வீழ்ச்சி, பசுமை மிகு வனப் பகுதிகள் ஆகியவை சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்கின் றன.

ஆழியாறு அணைக்கு வரும் சுற்றுலா பயணிகள் அணை யின் முழு பகுதியையும், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி யையும் கண்டுகளிக்கும் வகை யில்படகு சவாரி நடத்தப்பட்டு வருகிறது. படகு சவாரி நிறுத்தம்

கோட்டூர் பேரூராட்சி சார் பில் நடத்தப்பட்டு வரும் படகு சவாரிக்காக 2 நவீன படகுகள் உள்ளன. கடந்த 2 நாட்களாக ஆழியாறு அணைப்பகுதியில் பலத்த காற்றுடன் மழை பெய்து வருகிறது. இதனால் சுற்றுலா பயணிகளின் பாது காப்பு கருதி படகு சவாரி நிறுத்தப்பட்டது. இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். இது குறித்து கோட்டூர் பேரூராட்சி மன்ற தலைவர் பூங்கோதை துரைசாமி கூறியதாவது:–

ஆழியாறு அணையை பார்வையிட வரும் சுற்றுலா பயணிகளுக்கு உயிர் காக்கும் ஜாக்கெட் அணிந்து படகு சவாரி மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 2 நாட்களாக பலத்த காற்றுடன் மழை பெய்து வருகிறது. இதனால் சுற்றுலா பயணி களின் பாதுகாப்பு கருதி படகு சவாரி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பருவ நிலைக்கேற்ப படகு சவாரி தொடங்குவது குறித்து முடிவு எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## பொன்னேரி அணைக்கட்டை மாநில திட்டக்குழு துணை தலைவர் ஆய்வு



அரியலூர், பொன்னேரி அணைக் கட்டை மாநில திட்டக்குழு துணை தலைவர் ஆய்வு மேற்கொண்டார். கலந்தாய்வு கூட்டம்

அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில், அனைத்துத் துறை அலுவலர்களுடன் மாநில திட்டக்குழு துணைதலைவர் சாந்தாஷீலாநாயர் தலைமையில், மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் முன்னிலையில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றுது. இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில், மாநில சமச்சீர் வளர்¢ச்சி நிதியின் கீழ் அரிய லூர் மாவட் டத்தில் கல்வி, வேளாண்மை, சுகாதாரம், குழந்தைகள் வளர்ச்சித்திட்டம் மற்றும் அனைத்துத்துறை களில் மேற்கொள் ளப்பட்டு வரும் மக்கள் நலன் காக்கும் வளர்ச்சிப் பணிகளின் முன் னேற்றம் குறித்து மாநில திட்டக்குழுத் துணைத் தலை வர் சாந்தாஷீலாநாயர் அலு வலர்களுடன் ஆலோசனை நடத்தினார். இந்த ஆய்வின்போது, உதவி கலெக்டர் .சந்திரசேகர சகா மூரி ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சடையப்ப விநாயகமூர்த்தி மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.
அரசுமருத்துவமனை பின்னர், அரியலூர் அரசு தலைமை மருத்துவமனையில் மாநில திட்டக்குழு துணை தலைவர் மாவட்ட கலெக் டருடன் ஆய்வு மேற்கொண்டு ரத்த சேமிப்பு வங்கியின் செயல் பாடுகளையும், மருத் துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளி களையும் நேரில் பார்வை யிட்டும் ஆய்வு செய்தார்கள்.
பால் குளிரூட்டும் நிலையம் பின்னர் வி.கைகாட்டியில் 10 ஆயிரம் லிட்டர் கொள்ள ளவு கொண்ட தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம் செயல் பட்டு வருவதை பார்வை யிட்ட திட்டக்குழு துணைத் தலைவர் இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட மேலும் 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்டதாக இந்நிலையத்தை விரிவாக்கம் செய்வது குறித்து நேரில் பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டார்.
வாய்க்கால்
மேலும், உடையார் பாளையம் தாலுகா, குருவா லப்பர் கோவில் பொன்னேரி அணைக் கட்டினை பார்வை யிட்டு கரைகளை வலுப்ப டுத்தவும், நீர் ஒழுங்கிகளை சீரமைக்கவும், வரத்து வாய்க் கால்களை தூர்வாரவும் ஆழப் படுத்தவும், அடைப்பு பலகை களை சீரமைக்கவும் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் பொன்னேரியை புனரமைப் பது

தொடர்பாக மாநில திட்டக்குழு துணை தலைவர் சாந்தாஷீலாநாயர், கலெக்டர் சரவணவேல்ராஜ் டன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய் தார்.

**பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் தனியாக செயல்பட நடவடிக்க எடுக்க வேண்டும் குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்**



தர்மபுரியில் நடந்த குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயி ஒருவருக்கு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் விவேகானந்தன் வழங்கிய போது எடுத்தபடம்.

தர்மபுரி மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் தனியாக செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

குறைதீர்க்கும்கூட்டம்

தர்மபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் கலெக்டர் விவேகானந்தன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ராமர், வேளாண் இணை இயக்குனர் மோகன், வேளாண் பொறியியல் துறை இணை இயக்குனர் முருகேசன், விவசாயிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பல்வேறு கோரிக்கைகள் குறித்து விவசாயிகள் வலியுறுத்தி பேசினர். கூட்டத்தில் தமிழக விவசாயிகள் சங்க தலைவர் சின்னசாமி பேசுகையில், தர்மபுரி மாவட்டத்தில் 250 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் உள்ளது. இதன் மூலம் தினமும் 75 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரியில் செயல்படும் பால் கூட்டுறவு ஒன்றியத்தில் தினமும் ஒரு

லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில் பெரும் அளவு பால் தர்மபுரி மாவட்டத்தில் இருந்து தான் அனுப்பப்படுகிறது.
கண்காட்சி

விவசாயிகளுக்கு உடனடியாக பால் பணம் பட்டுவாடா செய்ய வசதியாகவும், தனியார் போட்டியை சமாளிக்கவும் தர்மபுரி மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர் ஒன்றியம் தனியாக செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் தர்மபுரி மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தவும், செயல்படாமல் இருக்கும் சங்கங்களை மீண்டும் செயல்படவும் வசதியாக இருக்கும் என்று அவர் கூறினார். இதுகுறித்து அரசுக்கு பரிந்துரை செய்யப்படும் என்று கலெக்டர் தெரிவித்தார்.முன்னதாக கலெக் டர் அலுவலக வளாகத்தில் வேளாண்த்துறை, வேளாண் பொறியியல் துறை, பட்டு வளர்ச்சித்துறை, கால்நடை பராமரிப்பு, மீன் வளர்ப்புத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் கண்காட்சி அமைக்கப்பட்டு இருந்தது. இதனை கலெக்டர் விவேகானந்தன் திறந்து வைத்து பல்வேறு துறைகள் சார்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதனை ஏராளமான விவசாயிகள் பார்வையிட்டனர்.

**கர்நாடக அணைகள் திறப்பு எதிரொலி: ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வினாடிக்கு 40 ஆயிரம் கனஅடி தண்ணீர் வருகிறது நீரில் அடித்து வரப்படும் முதலைகளால் பொதுமக்கள் பீதி**



கர்நாடக அணைகளில் கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளதால், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வினாடிக்கு 40 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் வருகிறது. இந்த தண்ணீரில் அடித்து வரப்படும் முதலைகள் கரை ஒதுங்குவதால் பொதுமக்கள் பீதி அடைந்துள்ளனர்.

நீர்வரத்து அதிகரிப்பு

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் கர்நாடகாவில் உள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. இதன் காரணமாக அந்த அணைகளுக்கு வரும் தண்ணீர் அப்படியே காவிரி ஆற்றில் திறந்து விடப்படுகிறது. இதன் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரித்து காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கபினி அணையில் இருந்து வினாடிக்கு 40 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் நேற்று முன்தினம் முதல் ஒகேனக்கல்லுக்கு வரத்தொடங்கியது. அப்போது வினாடிக்கு 37 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் வந்தது. இது படிப்படியாக அதிகரித்து நேற்று வினாடிக்கு 40 ஆயிரம் கனஅடியாக வந்தது.

புதுவெள்ளம் கொட்டுகிறது

இதன் காரணமாக ஒகேனக்கல்லில் உள்ள பிரதான அருவி, சினிபால்ஸ், ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் புதுவெள்ளம் செந்நிறத்தில் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இந்த வெள்ளப்பெருக்கு காரணமாக நேற்று 8–வது நாளாக அருவிகளில் குளிக்கவும், பரிசலில் செல்லவும் தடை விதிக்கப்பட்டது. மேலும், காவிரி ஆறு கரைபுரண்டு ஓடுவதால் கரையோரத்தில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு ஒலி பெருக்கி மூலம் வருவாய்த் துறையினர் வலியுறுத்தி வருகிறார்கள். ஒகேனக்கல் பிரதான அருவிக்கு செல்லும் பாதை மற்றும் ஆலாம்பாடி பரிசல்துறை செல்லும் பாதைகளில் போலீசார் தடுப்புகளை ஏற்படுத்தி கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் ஒகேனக்கல்லுக்கு வந்த சுற்றுலா பயணிகள் அருவியில் குளிக்க முடியாமல் கரைபுரண்டு ஓடிய காவிரி ஆற்றை ரசித்துவிட்டு சென்றார்கள்.

முதலைகளால் பீதி

இதற்கிடையே, நீர்வரத்து இல்லாத காலத்தில் கர்நாடக வனப்பகுதியையொட்டி ஓடும் காவிரி ஆற்றில் ஆங்காங்கே குட்டைபோல தேங்கி நின்ற தண்ணீரில் முதலைகள் வாழ்ந்தன. தற்போது காவிரியில் நீர்வரத்து அதிகரிக்கப்பட்டு உள்ளதால் இந்த முதலைகள் தண்ணீரில் அடித்து வரப்படுகின்றன. அப்படி அடித்து வரப்படும் முதலைகள் ஒகேனக்கல் காவிரி கரையோரம் ஆங்காங்கே கரையில் ஏறி வருவதாகவும், தண்ணீரில் இருந்து திடீர், திடீரென வெளியே வருவதாகவும் பொதுமக்கள் பீதியுடன் தெரிவித்தனர். எனவே, ஒகேனக்கல் காவிரி ஆற்றங்கரையோரத்தில் வனத்துறையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட வேண்டும் என்று பொதுமக்களும், சுற்றுலா பயணிகளும் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

**விவசாயிகளுக்கு நிவாரண தொகை உடனடியாக வழங்க வேண்டும்**

தேவகோட்டை, விவசாயிகளுக்கு நிவா ரண தொகையை உடனே வழங்க வேண்டும் என்று தேவகோட்டை யூனியன் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. யூனியன் கூட்டம் தேவகோட்டை யூனியன் கூட்டம் அதன் தலைவர் சவுந் தரம் பிர்லா கணேசன் தலை மையில் நடைபெற்றது. கமிஷ னர் மாரியப்பன், வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெய ராமன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திருப்பதி, என்ஜினீயர் சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில்நடைபெற்றவிவாதம்வருமாறு:-

ஜெயபுஷ்பம் (அ.தி.மு.க.):- தேவகோட்டை யூனியனில் பொது விழாக்கள் நடைபெறும் போது, கவுன்சிலர்களுக்கு தகவல் தெரிவிப்பதில்லை. வட்டார வளர்ச்சி அலுவ லர்:- உடனடியாக அனைவருக் கும் தகவல் தெரிவித்து அழைத்துகூட்டம்நடத்தப்படும். கே.ஆர்.பெரியணன் (அ.தி. மு.க.):- கடந்த 2 ஆண்டுகளாக வறட்சி பிடியில் சிக்கியுள்ள விவசாயிகள் பயிர் இன் சூரன்ஸ் தொகை கட்டிவிட்டு நிவாரணத்திற்காக காத்திருக் கின்றனர். விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிவாரண தொகைகளை வழங்காமல் மத்திய அரசு வஞ்சிக்கிறது. இதை உடனடியாக தமிழக அரசின் கவனத்துக்கு கொண்டு சென்று விவசாயி களுக்கு உரிய நிவாரணம் கிடைக்க தீர்மானம் நிறை வேற்றி அனுப்ப வேண்டும். கிராமப்புற விவசாயிகள் 100 நாள் வேலை செய்தும், கடந்த 6 வாரங்களுக்கு மேலாக ஊதி யம் இன்றி தவித்து வருகின் றனர். உடனடியாக

வழங்க நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

ஆற்றுப்பாலம்

வட்டார வளர்ச்சி அலுவ லர்:- தற்போது 100 நாள் பணி செய்பவர்களுக்கு அவர்களது பணம், இ.டி.எஸ்.மூலம் விரைவில் கிடைக்க நட வடிக்கை எடுக்கப்படும். கே.ஆர்.பெரியணன் (அ.தி. மு.க.):- எழுவன்கோட்டை ஆற்றில் பாலம் எப்போது கட்டப்படும். என்ஜினீயர்:- பாலம்கட்டு வதற்கு மண்சாயல் ஆய்வுக்கு எடுக்கப்பட்டுள்ளது. விரை வில் பணிகள் தொடங்க உள்ளது. சுப.கருப்பையா (அ.தி. மு.க.), டேவிட் (தே.மு.தி.க.):- கிராமப்புறங்களில் குத்துமதிப் பாக மின் கணக்கீடு செய்து விவசாயிகளுக்கு கஷ்டத்தை யும், நஷ்டத்தையும் ஏற்படுத்தி வருகின்றனர். முறையாக மின் பகிர்மான கணக்குகள் எடுக்க மின்வாரியத்தை அறிவுறுத்த வேண்டும். ஸ்டெல்லா (அ.தி.மு.க.):- புளியாலில் மகளிர் சங்கத்திற்கு கட்டிடம் கட்ட வேண்டும். திலகவதி (அ.தி.மு.க.):- எங் களது வார்டு பள்ளியில் உள்ள வேப்பமரத்தின் நடுவில் மின் வயர் செல்கிறது. இதனால் ஆபத்து ஏற்படலாம். உடனடி யாக அதனை அப்புறப்படுத்த வேண்டும். சண்முகநாதபட்ட ணம் சத்துணவு கூடம் ஆபத் தான நிலையில் உள்ளது. அதனை இடிக்க வேண்டும். என்ஜினீயர்:-அந்த கட்டி டத்தை இடிப்பதற்கு அரசின் அனுமதிக்காக காத்திருக்கி றோம். ஜான்சிராணி(இந்திய கம்யூனிஸ்டு):- இரவியமங்கலம் சாலை மிக மோசமாக உள் ளது. அதனை உடனடியாக போட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்சூரன்ஸ்தொகை

சந்திரன் (காங்கிரஸ்):- விவ சாயிகள் விவசாயம் செய்ய பணம் இல்லாமல் தவிக்கின் றனர். உடனடியாக இன் சூரன்ஸ் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கீழஉச்சாணியில் கடும் குடிநீர் தட்டுப்பாடு உள் ளது. அதனை நீக்க வேண்டும். தேவகோட்டை தாலுகாவில் தமிழக முதல்-அமைச்சரின் உத்தரவின் பேரில் நடத்தப் பட்ட அம்மா திட்ட முகாமில் வழங்கப்பட்ட முதியோர் உதவித்தொகை 2ஆயிரத்து 500 பேருக்கு நிறுத்தப்பட் டுள்ளது. அதனை வழங்கியவர் களும் அதிகாரிகள் தான், அதை நிறுத்தியவர்களும் அதி காரிகள்தான், என்னதான் நடக்கிறது. குடிநீர் வடிகால் வாரியம் மூலம் எத்தனை ஆழ் துளை கிணறு அமைக்கிறார் கள், எத்தனை பயன்பாட்டுக்கு வந்துள்ளது,

எத்தனை கிடப் பில் போடப்பட்டுள்ளது என்று கணக்கே கிடையாது. இதன் மூலம் வரிப்பணம் வீணடிக்கப்படுகிறது. முத்து குமரேசன் (அ.தி. மு.க.):- கடும் குடிநீர் தட்டுப் பாடு நிலவும் நேரத்தில் அதை போக்க 7 மாதத்திற்கு முன்பு ஆழ்துளை கிணறு அமைக்க டெண்டர் விடப்பட்டது. ஆனால் அந்த பணி இதுவரை தொடங்கப்பட வில்லை. அதை ரத்து செய்து விட்டு, மறு டெண்டர் விடப்படுமா? அல்லது ஆழ்குழாய் கிணறு மீண்டும் போடப்படுமா? என்ஜினீயர்:- ஆயிரம் அடி போட வேண்டிய வாகனம் ஒன்றுதான் உள்ளது. இதனால் தாமதம் ஏற்பட்டுள்ளது. மேலும் அங்கு ஊராட்சிமன்ற தலைவர் ஏற்கனவே முடிவு செய்த இடத்தில் போடக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்து வருவதால் தாமத மாகி வருகிறது. பொதுவான ஒரு இடம் தேர்வு செய்யப்பட்டு, உடனடியாக பணிகள்தொடங் கப்படும். இவ்வாறு விவாதம் நடை பெற்றது. நன்றி தெரிவித்து தலைவர் சவுந்தரம் பிர்லா கணேசன் பேசும் போது, கவுன்சிலர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற அடுத்த கூட்டத் தில் அனைத்து துறை அதி காரிகளும் கலந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். கவுன்சிலர்களின் கோரிக்கை கள் அரசுக்கு தீர்மானமாக அனுப்பி வைக்கப்படும் என்று கூறினார்.

**பயிர்க்கடனை தள்ளுபடி செய்யக்கோரி விவசாயிகள் வெளிநடப்பு**



பயிர்க்கடனை தள்ளுபடி செய்யக்கோரி விவசாயிகள் வெளிநடப்பு செய்தனர். வாக்குவாதம்

தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மாதம்தோறும் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறுவது வழக்கம். இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளும் விவசாயிகள், தங்களது முகவரி, ஊர், தாலுகா குறித்த விவரங்களை கணினியில் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்படி பதிவு செய்த விவசாயிகளுக்கு ரசீது வழங்கப்படும். இந்த ரசீது இருக்கும் விவசாயிகள் மட்டுமே கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என்று நேற்றுமுதல் புதிய வழிமுறை பின்பற்றப்பட்டது. இதனால் விவசாயிகள் அனைவரும் கணினியில் பதிவு செய்துவிட்டு, முறையாக ரசீது கொண்டு வந்தனர். ஆனால் தஞ்சை மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் சுகுமாரன் தலைமையில் 5 விவசாயிகள் மட்டும் கணினியில் பதிவு செய்யாமல், ரசீது இன்றி கூட்டத்தில் கலந்து கொள்ள வந்தனர். அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தினர். இதனால் போலீசாருக்கும், விவசாயிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பின்பு அதிகாரி ஒருவர் வந்து, விவசாயிகளை உள்ளே விட சொன்னார். இதையடுத்து விவசாயிகளை போலீசார் உள்ளே அனுமதித்தனர். கூட்டத்தில் பங்கேற்ற இந்த விவசாயிகள் நேராக கலெக்டரிடம் என்று முறையிட்டனர். வெளிநடப்பு இதேபோல் போலீசாரை வைத்து விவசாயிகளை தடுத்து நிறுத்தினால் தொடர்ந்து கூட்டம் நடத்த விடமாட்டோம் என்று ஆவேசமாக கூறினர். ஆனால் இந்த புதிய நடைமுறையை மற்ற விவசாயிகள் வரவேற்றுள்ளனர். அதுமட்டுமின்றி கணினி பதிவு செய்யும் நேரத்தை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். இதை ஏற்று கணினியில் பதிவு

செய்யும் நேரம் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார். இதையடுத்து கூட்டத்தில் இருந்து 6 விவசாயிகள் பயிர் கடனை தள்ளுபடி செய்யகோரி வெளிநடப்பு செய்தனர். பின்பு தஞ்சை மாவட்ட விவசாய சங்க தலைவர் சுகுமாரன் நிருபர்களிடம் கூறியதாவது:- தஞ்சை மாவட்ட விவசாயிகள் மழை இல்லாததால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுநாள் வரை கடன் வாங்கி விவசாயம் செய்தும் பலன் இல்லை. இதனால் விவசாயிகள் வாழ்வா? சாவா? என்ற நிலையில் உள்ளனர். சம்பா சாகுபடிக்கு நடவு செய்ய கூட பணம் இன்றி தவிக்கும் விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் விவசாய கடன் வழங்க வேண்டும். கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட விவசாய கடன் முழுவதையும் ரத்து செய்ய வேண்டும். பயிர் காப்பீட்டு திட்டத்தை அமல்படுத்த வேண்டும். மானிய விலையில் விதைநெல் வழங்க வேண்டும். மத்திய, மாநில அரசுகளின் விவசாயிகளின் விரோத போக்கை கண்டித்து அரசுக்கு ஒத்துழையாமை இயக்கம் நடத்த முடிவு செய்துள்ளோம். மின்கட்டணம் செலுத்த மாட்டோம். அரசு பஸ்களில் டிக்கெட் எடுக்க மாட்டோம். ரெயில்களிலும் டிக்கெட் எடுக்க மாட்டோம். இவ்வாறு அவர் கூறினார்.

## தஞ்சை மாவட்டத்தில் 25 ஆயிரம் எக்டேரில் குறுவை சாகுபடி



தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 25 ஆயிரம் எக்டேரில் குறுவை சாகுபடி நடைபெற்றுள்ளது என கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார். விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு கலெக்டர் சுப்பையன் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

தஞ்சை மாவட்டத்தில் 2014-15-ம் ஆண்டு குறுவை பருவத்துக்கு 44 ஆயிரம் எக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 25 ஆயிரத்து 150 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறுவை பருவத்தில் ஆடுதுறை-36, ஆடுதுறை-43, ஆடுதுறை-45 ஆகிய ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மேலும் குறுவை பருவத்துக்கான நாற்றங்கால் 320 எக்டேரில் உள்ளது. நடப்பு பருவத்தில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ள 25 ஆயிரத்து 150 எக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையில் 17 ஆயிரத்து 353 எக்டேரில் நடவு செய்யப்பட்டுள்ளது. தற்போது பயிர்கள் நல்ல நிலையில் உள்ளன. உரங்கள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் ஆடுதுறை-36, ஆடுதுறை-43, ஆடுதுறை-45 ஆகிய ரகங்களில் 267 மெட்ரிக் டன் நெல் ரகங்கள் வினியோகம் செய்யப்பட்டு உள்ளது. இது தவிர தனியார் மற்றும் கூட்டுறவு தொடக்க வங்கிகளில் தேவையான அளவு விதைகள் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்படுகிறது. குறுவை சாகுபடி செய்யும் டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு குறுவை தொகுப்பு திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தின் தேவைக்காக யூரியா 7,603 மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி. 2,470 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 1,749 மெட்ரிக் டன்னும், காம்ப்ளக்ஸ் உரங்கள் 1,717 மெட்ரிக் டன்னும் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகின்றது. 122 டன் வைக்கோல் பழுதான மின்மாற்றிகள் உடனுக்குடன் பழுது நீக்கம் செய்து சீரான மின்வினியோகம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது தஞ்சை காவிரி டெல்டா பகுதி விவசாயிகளின் குறுவை சாகுபடிக்காக முதல்-அமைச்சரின் ஆணைப்படி 12 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வார திங்கட்கிழமையும் துணை மின் நிலைய மின்பாதைகள் 2 குழுக்களாக பிரிக்கப்பட்டு, சுழற்சி முறையில் நாள் ஒன்றுக்கு 12 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ரூ.70 லட்சம் செலவில் தஞ்சை மாவட்டத்தில் 7 உலர் தீவன கிடங்குகள் அமைக்கப்பட்டு, தேவைப்படும் விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போருக்கு கிலோ ரூ.2 விலையில் வைக்கோல் வழங்குதல் திட்டத்தின் கீழ் இதுவரை 122 டன் வைக்கோல் வழங்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்போர் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் முதல்-அமைச்சருக்கு நன்றி**



தேனியில் நடந்த விவ சாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தின் போது, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட் டத்தை 142 அடியாக உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டதற்காக தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதாவுக்கு விவசாயிகள் நன்றி தெரிவித்து பேசினர்.முதல்-அமைச்சருக்கு நன்றி தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி தலைமை தாங்கினார். மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சுந்தரம், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவி யாளர் (வேளாண்மை) ரெங்க நாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த கூட்டத்தில் நூற்றுக்கணக்கான விவசாயி கள் கலந்து கொண்டனர். இந்த கூட்டம் தொடங்கிய போது விவசாயிகள் பாண்டி யன், கண்ணன் உள்ளிட்ட சிலர் பேசும் போது, 'முல்லைப் பெரியாறு அணை நீர்மட் டத்தை 142 அடியாக உயர்த்த உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்ற துடன், அந்த தீர்ப்பை அமல் படுத்த நடவடிக்கை எடுத்த தற்காக முதல்-அமைச்சர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். சுமார் 4 ஆயிரத்து 500 ஏக்கர் பாசன நிலங்களுக்கு பயன் அளிக்கும் தந்தை பெரியார் பாசன வாய்க்காலை புனர மைப்பு செய்ய ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்ததற்கும் தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக் கிறோம்' என்றனர். அப்போது கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் ஒருசேர கரவோசை எழுப்பினர்.

மாடுகள் கடத்தல் அதன்பிறகு கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள், தேனி மாவட்டத்தில் இருந்து கேரள மாநிலத்திற்கு விதிகளை மீறி மாடுகள் கடத்தல் தொடர்ந்து நடந்து வருவதாக வும், நல்ல நிலையில் உள்ள பசு மாடுகளும்

லாரிகளில் கடத் தப்பட்டு வருவதாக குற்றம் சாட்டினர். விவசாயிகளின் குற்றச்சாட்டுக்கு பதில் அளித்து கலெக்டர் கே.எஸ். பழனிசாமி பேசுகையில், 'கேரள மாநிலத்திற்கு கொண்டு செல்லப்படும் மாடுகளை கால்நடை டாக்டர்கள் பரிசோதனை செய்து சான்று அளிக்கின்றனர். நல்ல நிலை யில் உள்ள மாடுகளுக்கு சான்று அளிக்கப்படுவது இல்லை. பலன் அளிக்க முடியாது என்ற நிலையில் உள்ள மாடுகளுக்கு மட்டுமே சான்றிதழ் அளிக்கின்றனர். விதிகளை மீறி மாடுகள் கொண்டு செல்வது குறித்து தெரியவந்தால் விவசாயிகள் உடனடியாக தகவல் தெரிவிக்கலாம்' என்றார். இந்த கூட்டத்தில் பல்வேறு குறைகள், கோரிக்கைகள் தொடர்பாக விவசாயிகள் பேசினர். இக்கூட்டத்தின் போது, முதல்-அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 54 பயனாளிகளுக்கு ரூ.4 லட்சத்து 14 ஆயிரத்து 750 மதிப்பில் நலத்திட்ட உதவி களை கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி வழங்கினார். இதில், வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறை துணை இயக்குனர் முத்தையா மற்றும் அரசின் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் ரூ.10½ கோடி கடன் வழங்கி சாதனை**



நெல்லை,

மருக்காலங்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் நடப்பு ஆண்டில் ரூ.10½ கோடி கடன் வழங்கி சாதனை படைத்து உள்ளது. ரூ.10½ கோடி கடன் நெல்லை மாவட்டம் மருக்காலங்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டம், நெல்லை மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் இணைந்து உறுப்பினர் கல்வி

திட்டம் முகாமை நடத்தியது. முகாமுக்கு சங்க தலைவர் ம.அய்யாத்துரை தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:- இந்த கூட்டுறவு சங்கத்தின் மூலம் மருக்காலங்குளம், பலபத்திர ராமபுரம், முத்தம்மாள்புரம் ஆகிய வருவாய் கிராமங்களை சேர்ந்த மக்களுக்கு கடன்கள் வழங்கி வருகிறோம். நடப்பு ஆண்டில் இந்த சங்கம் ரூ.10.60 கோடிக்கு கடன்கள் வழங்கி உள்ளது. மேலும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டம் மூலம் ரூ.7 லட்சம் பங்கு மூலதனம் பெற்று மக்களுக்கு நகைக்கடன் வழங்கி உள்ளது. இந்த சங்கம் தொடர்ந்து லாபத்தில் இயங்கி வருகிறது. இவ்வாறு அவர் பேசினார். அதிகாரிகள் தொடர்ந்து, ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்ட அலுவலர் ஜெபக்குமார் சுதந்திரன், மாவட்ட கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குனர் முருகபூபதி, மருக்காலங்குளம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க செயலாளர் தங்கப்பாண்டியன் ஆகியோர் பேசினார்கள். கூட்டத்தில், விவசாய சங்க தலைவர் முருகையா, நிர்வாகிகள் காசித்துரைச்சி, தங்கப்பாண்டியன், பெருமாள், சாந்தி, முருகையா, செந்தில்குமார், பாலசுப்பிரமணியன், செல்வி, கிருஷ்ணசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக சங்க செயலாளர் செல்லச்சாமி வரவேற்று பேசினார். முடிவில், நெல்லை மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் மேலாளர் சிவராமலிங்கம் நன்றி கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**3 ஆண்டுகளாக புதர்மண்டி கிடக்கிறது புதுப்பட்டினம் வாய்க்கால் தூர்வார நடவடிக்கை எடுக்கப்படுமா?விவசாயிகள் எதிர்பார்ப்பு**

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் புதுபட்டினம் வாய்க்கால் கடந்த 3 ஆண்டுகளாக தூர் வாரப்படாமல் புதர் மண்டி கிடக்கிறது. இந்த வாய்க் கால் உடனடியாக தூர்வாரப்படுமா என்று விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் கடை மடை பகுதிகளுக்கு கடந் தாண்டு மேட்டூர் அணையிலிருந்து போதுமான தண்ணீர் வராததால் மூன்றில் ஒரு பங்கு பரப்பளவுகூட சம்பா சாகுபடி நடைபெறவில்லை. கடை மடை பகுதிகளில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு போகம் சம்பா சாகுபடி மட்டுமே நடந்து வருகிறது. கடந்தாண்டு போதுமான தண்ணீர் வராததால் குருவிக்கரம்பை, மருங்கப்பள்ளம், வீரியங்கோட்டை, மரக்காவலசை போன்ற பகுதிகள் வழியாக செல்லக்கூடிய 5ம் நம்பர், 6ம் நம்பர் வாய்க்கால்கள் தூர்வாரப்படாமல் தூர்ந்துள்ளது. இந்த ஆண்டாவது மேட்டூர் அணை விரைவில் நிரம்பி ஒருபோகம் சம்பா சாகுபடி செய்து விடலாமா என்ற ஏக்கத்தில் விவசாயிகள் உள்ளனர். அணை நிரம்பி திறக்கப்பட்டாலும் கடைமடை பகுதியில் உள்ள பாசன வாய்க்கால்கள் தற்போதுள்ள மோசமான நிலை யில் தண்ணீர் கிடைப்பது எட்டாகனியாகவே இருக் கும். சம்பா சாகுபடிக்கு முன் கடைமடை பகுதி பாசன வாய்க்கால்கள் தூர்வார வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுபற்றி தஞ்சை மாவட்ட திமுக விவசாய அணி துணை அமைப் பாளர் பொன்.பாலசுப்பிரமணியன் கூறும் போது, தஞ்சை மாவட்டத்தின் கடைக்கோடி பகுதி தான் சேதுபாவாசத்திரம். முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் முயற்சியால் ரூ. 200 கோடி செலவில் காவிரி படுகை தூர்வாரப்பட்டு கரைகள் அமைக்கப்பட்டன. இதனால் மேட்டூர் அணை திறந்தவுடன் தங்கு தடை யின்றி கடைமடை பகுதிக்கு தண்ணீர் வந்து சேரக்கூடிய சூழ்நிலையில் காவிரிப்படுகை இருந்தாலும் சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதியில் உள்ள புதுப்பட்டினம் வாய்க்கால் குருவிக்கரம்பை - மருங்கப்பள்ளம் வழியாகவும், பூக்கொல்லை - வீரியங்கோட்டை வழியாகவும் செல்லக்கூடிய 5ம் நம்பர், 6ம் நம்பர் வாய்க்கால்கள் கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக தூர்வாரப்படாமல் உள்ளது. இதனால் வாய்க்கால்கள் இருக்கும் இடமே தெரியாத அளவுக்கு தூர்ந்து மூடிவிட்டது. இதனால் உடனடியாக பாசன வாய்க்கால்களை தூர்வார அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போல் ஏரிகள் நிரம்புவதற்கு பாசன வாய்க்கல்கள் மூலம் பாசனம் தரக்கூடிய

வாய்க்கால் களையும், ஏரி, குளங் களிலிருந்து விவசாயத்துக்கு பாசனம் தரக்கூடிய வாய்க்கால்களையும் 100 நாள் வேலை திட்டத்தின்கீழ் தூர் வாருவதற்கு ஊராட்சி தலைவர்களுக்கு கலெக்டர் உத்தரவிட வேண்டும் என்றார்.

**<u>கிராமப்புற விவசாயிகள் நாட்டுக்கோழி பண்ணை அமைக்க 50சதவீதம் மானியம் விண்ணப்பிக்க 31ம் தேதி கடைசி</u>**

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் நாட்டுக்கோழி பண்ணை அமைக்க விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. இதற்கு விண்ணப்பிக்க 31ம் தேதி கடைசி நாளாகும். தமிழக முதல்வரால் 2012- 13ம் ஆண்டு கோழியின மேம்பாட்டு திட்டம் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2012-13ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் 35 பேருக்கு நாட்டுக்கோழி குஞ்சுகள் வழங்கப்பட்டது. 2013-14ம் நிதியாண்டில் 240 பயனாளிகளுக்கு நாட்டுக்கோழி குஞ்சுகள் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு 2014-15ம் நிதியாண்டில் நாட்டுக்கோழி வளர்ப்பை மேம்படுத்தும் வகையில் ஒரு பயனாளிக்கு ரூ.1.17 லட்சம் திட்ட மதிப்பில் மொத்தம் 160 பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது. இதில் 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தில் கோழிக்கொட்டகை அமைக்க, குஞ்சு மற்றும் தீவனம், உபகரணங்கள் வாங்க முதல் தவணையாக 25 சதவீதம் மானியத்தொகை ரூ.29,250 மாநில அரசால் வழங்கப்படும். இத்திட்டத்தின் இறுதியில் 25 சதவீதம் மானியத்தொகை (ஆதிதிராவிடர்களுக்கு 33 சதவீதம் மானியம்) நபார்டு வங்கி மூலமாக வழங்கப்படும். முதல் தவணை கோழிக்குஞ்சுகள் 100 சதவீதம் மானியத்திலும், 2வது தவணை கோழிக்குஞ்சுகள் 50 சதவீதம் மானியம் ரூ.3,125க்கும், 3வது தவணை கோழி குஞ்சுகள் 30 சதவீதம் மானியம் ரூ.1,875க்கும் தமிழக அரசால் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிக்கு தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மூலம் 5 நாட்கள் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். மருத்துவம் மற்றும் தடுப்பூசிகள் கால்நடை பராமரிப்புத்துறையால் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒரு பயனாளிக்கு ஒருமுறை மட்டுமே மானியம் வழங்கப்படும். இத்திட்டம் கிராமப்புற பகுதியில் மட்டுமே செயல்படுத்தப்படவுள்ளது. 12 முதல் 14 வார காலத்துக்குள் நாட்டுக்கோழிகள் விற்பனை செய்யும் அளவுக்கு வளர்ந்துவிடும் என்பதால் ஒரு

ஆண்டில் 14 வார சுழற்சியில் 3 தவணையில் 250 கோழிகள் வளர்க்க ஏதுவாக இத்திட்டம் அமைந்துள்ளது. நாட்டுக்கோழி பண்ணை அமைக்க ஆர்வம் உள்ள விவசாயிகள் கால்நடை பராமரிப்புத்துறை அல்லது அவர் களது குடியிருப்பு பகுதியை சேர்ந்த தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலமாக விண்ணப்பிக்கலாம். பயனாளி கடன் பெற தகுதியான நபராக இருப்பது அவசியம். வங்கிக்கடன் இல்லாமல் தனது சொந்த பணத்திலும் முதலீடு செய்து இத்திட்டத்தை செயல்படுத்தலாம். எனவே தஞ்சாவூர் மாவட்டத்தில் நாட்டுக்கோழி பண்ணை அமைக்க ஆர்வமுள்ள விவசாயிகள் அதற்கான விண்ணப்பங்களை வரும் 31ம் தேதிக்குள் சம்பந்தப்பட்ட தேசிய மயமாக்கப்பட்ட வங்கி அல்லது கூட்டுறவு வங்கி மூலமாகவோ தஞ்சாவூர் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம். இவ்வாறு தஞ்சை கலெக்டர் சுப்பையன் தெரிவித்துள்ளார்.

**பயிர் மதிப்பீட்டாய்வு திட்ட புத்தாக்க பயிற்சி வகுப்பு**

தஞ்சை, : தஞ்சை கலெக்டர் அலுவலக வளாகத்தில் பயிர் மதிப்பீட்டாய்வு திட்ட புத்தாக்க பயிற்சி நடந்தது. வேளாண்துறை அலுவலர்களுக்கான பயிற்சியை துவக்கி வைத்து கலெக்டர் சுப்பையன் பேசியதாவது: இந்த பயிற்சியை மாவட்டம் முழுவதும் உள்ள வேளாண் அலுவலர்கள் ஒரே இடத்தில் நடத்துவதால் ஒரே மாதிரியான கருத்தை அனைத்து பகுதியிலுள்ள கள பணியாளர்களும் பெற முடியும். இப்பணியை திட்டமிட்டப்படி நடப்பாண்டில் துல்லியமாகவும், பரப்பளவு விடுபடாமலும், இதில் வழங்கப்படும் அறிவுரைகளை முழுமையாக கவனித்து பின்பற்றி திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த வேண்டும். இந்த திட்டத்தில் பெறப்படும் புள்ளி விவரங்கள் சரியாக இருக்க வேண்டும் என்பதால் இப்பணியில் ஈடுபடும் அலுவலர்கள் வேளாண் உற்பத்தி விவரங்களை சரியாக அளிக்க வேண்டும் என்றார். பயிற்சி வகுப்பில் மண்டல புள்ளியியல் துறை இணை இயக்குனர் காமராஜ், வேளாண்துறை இணை இயக்குனர் சேகர், தேசிய மாதிரி நிறுவன முதுநிலை கண்காணிப்பாளர் குருமூர்த்தி, புள்ளியியல் துறை துணை இயக்குனர் கல்யாணராமன் மற்றும் வேளாண்துறை, தோட்ட கலைத்துறை, புள்ளியியல் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அலங்காநல்லூர் அருகே விவசாயத்தை காப்பாற்றும் தற்காலிக கிணறு

அலங்காநல்லூர் : அலங்காநல்லூர் பகுதியில், தற்காலிக கிணறு அமைத்து, விவசாயி ஒருவர், தனது தோட்டத்து பயிர்களை காத்து வருகிறார். அலங்காநல்லூர் சுற்று வட்டார பகுதியில், பருவமழை பொய்த்ததால், கடும் வறட்சி நிலவுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக தோட்டங்களில் இருந்த தென்னை, வாழை, கொய்யா ஆகிய பழ மரங்கள், போதிய தண்ணீர் இல்லாமல் கருகிவிட்டது. எஞ்சிய மரங்களையும், வாழை மற்றும் பூச்செடிகளையும், விவசாயிகள் ஆழ்துளை கிணறுகளி லிருந்து வெளியேறும் குறைந்த அளவு நீரை பாய்ச்சி காத்து வருகின்றனர். இந்நிலையில், அலங்காநல்லூர் அருகே அழகாபுரியை சேர்ந்த விவசாயி ராமமூர்த்தி என்பவர் புதுமையான முறையில் தற்காலிக கிணறு அமைத்து, தனது தோட்டத்தில் உள்ள தென்னை, வாழை போன்ற மரங்களையும், தோட்டப்பயிர்களையும் காத்து வருகிறார். இதுகுறித்து விவசாயி கூறியதாவது: போதிய மழை இல்லாததால், தண்ணீரின்றி தோட்டங்களில் இருந்த தென்னை, வாழை, கொய்யா போன்ற மரங்கள் கருகி விட்டன. மேலும் ஆழ்துளை கிணறு மூலம் கிடைக்கும் குறைந்த அளவு நீரைக் கொண்டு, எஞ்சியுள்ள பயிர்களை காத்து வருகிறோம். இந்நிலையில் ஒட்டன்சத்திரம் பகுதியில், தற்காலிக கிணறு அமைத்து, தோட்டப்பயிர்களை காப்பதாக கேள்விபட்டு, அங்கு சென்று பார்த்து வந்தேன். அதனடிப்படையில், 30 அடி நீளம், 12 அடி அகலம் 9 அடி ஆழத்தில் 60*40 என்ற அளவில் பள்ளம் தோண்டினேன். அதில் தண்ணீர் பூமிக்குள் செல்லாதபடி பிளாஸ்டிக் தார்ப்பாய் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இதன் கீழ் 1 அடி உயரத்திற்கு வைக்கோல்கள் பரப்பப்பட்டுள்ளது. இதில், எனது தோட்டத்தில் 400 அடி ஆழத்தில் போடப்பட்டுள்ள ஆழ் துளை கிணறுகள் மூலமாக கிடைக்கும் குறைந்த அளவு நீரை நிரப்புகிறேன். இவ்வாறு நிரப்பும் நீரை 36 மணிநேரம் வரை சேமித்து, பம்பு செட்டு முலம் வெளியேற்றி 3 மணிநேரம் வயல்களுக்கு பாய்ச்சுகிறேன்' என்று தெரிவித்தார்.

## குற்றால அருவிகளில் தண்ணீர் குறையவில்லை

தென்காசி, : குற்றாலத்தில் பத்து தினங்களுக்கு பிறகு நேற்று வெயிலடித்தது. ஆனாலும் அருவிகளில் தண்ணீர் நன்றாக விழுகிறது. குற்றாலத்தில் ஜூன் மாதம் சீசன் ஏமாற்றிய நிலையில் ஜூலை மாதம் இரண்டாவது வாரம் சற்று கை கொடுத்தது. சாரல் தொடர்ந்து பெய்ததால் அருவிகளில் தண்ணீர் நன்றாக விழுந்தது. விடுமுறை தினங்கள் மட்டுமின்றி சாதாரண நாட்களிலும் கூட்டம் அலைமோதியது. நேற்று முன்தினம் வரை சீசன் அருமையாக இருந்த நிலையில் சற்றும் எதிர்பாராத விதமாக நேற்று சாரல் ஓய்ந்து வெயிலடித்தது. மதியத்திற்கு பிறகும் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. ஆனாலும் அருவிகளில் தண்ணீர் குறையவில்லை. மெயினருவியில் ஆண்கள் மற்றும் பெண்கள் குளிக்கும் பகுதியில் தண்ணீர் பரந்து விழுந்தது. ஐந்தருவியில் ஐந்து பிரிவுகளிலும், பழையகுற்றாலம், புலியருவி, சிற்றருவி ஆகியவற்றிலும் தண்ணீர் நன்றாக விழுகிறது. சுற்றுலா பயணிகள் கூட்டமும் ஓரளவு இருந்தது. இந்நிலையில் குற்றாலத்தில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய சாரல் திருவிழா நாளை தொடங்கி அடுத்த மாதம் 2ம் தேதி வரை மொத்தம் 8 நாள் நடைபெறுகிறது.

## <u>வரத்து குறைவால் தக்காளி விலை கிராக்கி கிலோ ரூ.45க்கு விற்பனை</u>

திருச்சி, : விளைச் சல் இல்லாமல் வரத்து குறை வால் திருச்சியில் நாட்டு காய்கறிகளின் விலை தொடர்ந்து உச்ச த்தில் இருந்து வருகிறது. தக்காளி கிலோ ரூ.45க்கு விற்கப்பட்டு வருகிறது. திருச்சி காந்தி மார்க் கெட்டுக்கு ஊட்டி, கொடைக் கானல், கர்நா டகா, பெங்க ளூர் உள் ளிட்ட பகுதிகளில் இருந்து இங்கிலீஸ் காய்கறிகள் இறக்குமதி செய்யப்ப டுகிறது. இதே போல் இங்கிருந்து பெரம் பலூர், தஞ்சை, புதுக் கோட்டை, திருச்சி மற்றும் சுற்றுப்புற பகுதிகளுக்கு ஏற்றுமதியும் செய்யப் படுகிறது. இதேபோல் மணப்பாறை, ஆலம்பட்டி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து நாட்டு காய்கறிகள் தினமும் இறக் குமதி செய்யப்ப டுகிறது. போதிய மழையில் லாததால் எதிர்பாராத அளவில் காய்கறி உற்பத் தியும் நாளுக்குநாள் குறைந்து வருகிறது. தேவை மற்றும் உற்பத்திக்கு இடையே உள்ள இடைவெளி அதிகரித்துள் ளதால் அதன் விலையும் நாளுக்குநாள் அதிகரிக்கிறது என்று கூறலாம் என சில்லரை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். கடந்த மாதம் ரூ.20க்கு விற்ற ஒரு கிலோ கத்தரிக்காய்

ரூ.30க்கும், ரூ.15க்கு விற்ற தக்காளி ரூ.35க்கும், ரூ.24க்கு விற்ற பல்லாரி ரூ.36க்கும், ரூ.30க்கு விற்ற சின்ன வெங்காயம் ரூ.40க்கும், ரூ.50க்கு விற்ற பச்சை மிளகாய் ரூ.70க்கும், ரூ.25க்கு விற்ற வெண்டை ரூ.40க்கும், ரூ.25க்கு விற்ற உருளை ரூ.35க்கும், ரூ.60க்கு விற்ற கருணை கிழங்கு ரூ.90க்கும், ரூ.35க்கு விற்ற சேப்பை கிழங்கு ரூ.45க்கும், ரூ.20க்கு விற்ற முள்ளங்கி ரூ.35க்கும், ரூ.120க்கு விற்ற இஞ்சி ரூ.140க்கும், ரூ.20க்கு விற்ற மாங்காய் ரூ.30க்கும், ரூ.30க்கு விற்ற சேனை கிழங்கு ரூ.40க்கும், ரூ.60க்கு விற்ற அவரைக்காய் ரூ.80க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இதேபோல் விலையில் எந்தவித மாற்றமும் இல்லாமல் கடந்த சில மாதங்களாகவே ஒரு கிலோ முருங்கை ரூ.50க்கும், தேங்காய் ரூ.15வரையிலும் விற்கப்பட்டு வருகிறது. இதே போல் ஆங்கில காய்கறிகள் விலையும் தொடர்ந்து ஏறுமுகமாக உள்ளது. ரூ.25க்கு விற்ற கேரட் ரூ.65க்கும், ரூ.12க்கு விற்ற முட்டைகோஸ் ரூ.24க்கும், ரூ.25க்கு விற்ற பீட்ரூட் ரூ.50க்கும், ரூ.25க்கு விற்ற காளான் ரூ.50க்கும், ரூ.25க்கு விற்ற கொடை மிளகாய் ரூ.50க்கும், ரூ.20க்கு விற்ற காலிபிளவர் ரூ.40க்கும் விற்கப்பட்டு வருகிறது. இதில் ஒரு சில ஆங்கில காய்கறிகள் விலை குறைந்துள்ளது. ரூ.200க்கு விற்ற ஒரு கிலோ பட்டர் பீன்ஸ் ரூ.120க்கும், ரூ.90க்கு விற்ற சாதா பீன்ஸ் ரூ.70க்கும், ரூ.45க்கு விற்ற சவ்சவ் ரூ.40க்கும், ரூ.45க்கு விற்ற நூல்கோல் ரூ.40க்கும் விற்கப்படுகிறது.

## **<u>உலரக வாழைப்பழ திட்டத்திற்கு அரசு மானியம் பெற்றுத்தரப்படும் கலெக்டர் தகவல்</u>**

தொட்டியம், : தொட்டியம் பகுதியில் விளையும் பூவன், ரஸ்தாளி, ஏலரசி, கற்பூரவள்ளி ஆகிய ரகங்களை கொண்டு வாழை யில் மதிப்பு கூட்டப்பட்ட வாழைப்பழத்தை கதிரொளியில் உலர வைத்து விற்பனை செய்து வருகின்றனர். மேலும் மெடி உலரக வாழைப்பழமும் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மெடி உலர் வாழைப்பழத்தை சர்க் கரை நோய் உள்ளவர்களும், முதியவர்களும் சாப்பிட உகந்ததாக தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். மேலும் வாழைப்பழத்தில் இருந்து ஜாம் தயாரிக்கப்படுகிறது. இதையடுத்து திருச்சி மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீமுரளிதரன் உலரக வாழைப் பழ மையத்தை பார்வையிட் டார். அப்போது அவர் பேசுகை யில், இந்த திட் டத்தை விரிவு

படுத்தினால் அரசிடம் இருந்து கிடைக்கும் மானியத்தை பெற்று தருவதாக கூறினார்.மேலும் இந்த சாக்லேட், ஜாம் உலரக பழத்தை சாதாரண மக்களும் பயனடையும் வகையில் உற்பத்தி செய்ய வேண்டும் என விவசாயிகளை கேட்டுக்கொண்டார்.அகில இந்திய வாழை உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு துணைத்தலைவர் சுகுமார் , தொட்டியம் வட்ட நீர்பாசன மற்றும் வாழை உற்பத்தியாளர்கள் சங்க பொருளாளர் தியாகராஜன்பிள்ளை, காவிரி டெல்டா நீர் பாசன விவசாயிகள் பாது காப்பு நலச்சங்க மாவட்ட செயலாளர் காந்திபித்தன், தமிழ்நாடு வாழை உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு பொருளாளர் மணி குட்டி ஆகியோர் வாழ்த் துரை வழங்கினர். தொட்டியம் வட்ட வாழை உற்பத்தி யாளர்கள் சங்க துணைத்தலைவர் மருதை, கிருஷ்ணமூர்த்தி ஐயர், தீனதயாளன், கிருஷ் ணன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## **வலங்கைமான் விற்பனை கூடத்தில் ஒரு குவின்டால் பருத்தி ரூ.5,109க்கு கொள்முதல்**

வலங்கைமான், : திருவாரூர் மாவட்டம் வலங்கைமானில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடம் உள்ளது. விற்பனை கூடத்தின் மூலம் இப்பகுதியில் விளைவிக்கப்படும் பருத்திகள் இடைத்தரகர்கள் இன்றி சரியான எடையுடன் நல்ல விலைக்கு விற்று விவசாயிகள் பலன் பெறுவது வழக்கம்.
நேற்று முன்தினம் நடைபெற்ற பருத்தி ஏலத்தில் 246 விவசாயிகள் தங்களது பஞ்சுகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். பஞ்சினை கொள்முதல் செய்வதற்கென ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து 6 வியாபாரிகள் கலந்து கொண்டனர்.
அதிகபட்ச விலையாக குவின்டால் 5 ஆயிரத்து 109 ரூபாய்க்கும், குறைந்தபட்ச விலையாக குவிண்டால் 4 ஆயிரத்து 289 ரூபாய்க்கும், சராசரி விலையாக 4 ஆயிரத்து 845 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்பட்டது. நேற்று முன்தினம் நடைபெற்ற மறைமுக ஏலத்தில் மட்டும் சுமார் 512 குவின்டால் பருத்தி ரூ.24 லட்சத்து 84 ஆயிரத்து 277க்கு கொள் முதல் செய்யப்பட்டது. ஏலத்தில் ஒழுங்குமுறை விற்பனை கூட தனி அலுவலர் மனோகரன், செயலா ளர்

பாலசந்திரன், மேற்பார்வையாளர் சிதம்பரம், அலுவலக உதவியாளர் பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## சூரிய ஒளி மின் மோட்டார் இயக்கம் கலெக்டர் பார்வை

சிவகங்கை, : சூரிய ஒளி மின் சக்தி மூலம் இயங்கும் ஆழ்துளை கிணறு மோட்டாரின் செயல்பாடுகளை கலெக்டர் ராஜாராமன் பார்வையிட்டார். சிவகங்கை மாவட்டத்தில் உள்ள விவசாய நிலங்களில் உள்ள ஆழ்துளை கிணற்றில் சூரிய மின் சக்தி மூலம் இயங்கும் 5 ஹெச்பி மோட்டார்கள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மூலம் வேளாண்பொறியியல் துறை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுத்தப்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்டத்தில் 60 விவசாயிகளின் நிலங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ.2 கோடியே 56 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விவசாயி தனது பங்களிப்பாக ரூ.1 லட்சத்து 4 ஆயிரத்து 750 செலுத்த வேண்டும். அரசு ரூ.3 லட்சத்து 35 ஆயிரம் மானியமாக வழங்கும். இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட கூமாச்சிப்பட்டி கிராமத்தை சேர்ந்த சிவப்பிரகாசம் என்ற விவசாயியின் நிலத்தில் உள்ள ஆழ்துளை கிணறு மோட்டாரின் மூலம் நீர் இறைக்கப்படுவது, அதன் செல்பாட்டை கலெக்டர் ராஜாராமன் பார்வையிட்டார். இத்திட்டம் பற்றிய கூடுதல் விபரங்கள் அறிய சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் உள்ள வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் அலுவலகம் அல்லது 04575-240213 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## வரத்துக் குறைவால் பழச்சாறு விலை உயர்வு கரும்புக்கு மாறும் மக்கள்

கரூர், : கரூரில் பழச்சாறுகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. வெயில் காலத்தில் பொதுமக்கள் கரும்பு, பழச்சாறுகளை அதிக அளவில் வாங்குகின்றனர். கடந்த ஆண்டு கடுமையான மின்வெட்டு ஏற்பட்டபோது

பழச்சாறுகளின் விலை உயர்த்தப்பட்டது. தொடர்ந்து சர்க்கரை விலை உயர்வு காரணமாக விலை உயர்ந்து தொடர்ந்தது. விலை மலிவாக கிடைக்கும் பன்னீர் திராட்சை, தர்பூசணி, முலாம் பழச்சாறு ரூ.20க்கு விற்கப்பட்டது. மின்வெட்டு பிரச்னை தற்போது இல்லை. என்றாலும் விளைச்சல் குறைவு காரணமாக பழங்களின் வரத்து குறைந்து விட்டது. இதனால் பழங்களின் விலை அதிகரித்துவிட்டது. பழ விலை உயர்வால் பழச்சாறுகளின் விலையும் உயர்ந்துவிட்டது. பழச்சாறுகளை பொறுத்தளவில் தற்போது தர்பூசணி மட்டுமே ரூ.20க்கு கிடைக்கிறது. திராட்சை ரூ.35, முலாம் ரூ.30க்கு விற்கப்படுகிறது. விலை மலிவாக உள்ள இந்த பழங்களின் சாறுக்கே இந்த விலை என்றால் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படும் ஆப்பிள், ஆரஞ்சு, போன்றவற்றின் விலையை கேட்க தேவையில்லை. இவற்றில் விலை ரூ.40ஆக உயர்ந்து விட்டது. கோடை வெயிலை தணிக்க பழச்சாற்றை நாடினர். கோடை முடிந்தும் தற்போது வெயில் குறையாததால் பழச்சாறு விற்பனை களை கட்டியே காணப்படுகிறது. இளநீரும் ரூ. 35 முதல் ரூ.40வரை உயர்ந்து விட்டது. இது போன இவற்றின் விலை உயர்வால் பெரும்பாலானோர் கரும்புச்சாறுக்கு மாறி விட்டனர். கரூர் நகரில் பல இடங்களிலும் கரும்புச்சாறு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு டம்ளர் ரூ.10க்கு விற்பனை செய்யப்படுகிறது. சர்க்கரை நோயாளிகளைத் தவிர மற்றவர்கள் இயற்கை பானமான கரும்புச் சாற்றை விரும்பி அருந்துவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

## <u>வம்பன் வேளாண் மையத்தில் மாம்பழங்களில் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சிவிவசாயிகள் பங்கேற்பு</u>

ஆலங்குடி, : ஆலங்குடியை அடுத்த வம்பன் வேளாண் அறிவியல் மையத்தில் மாம்பழத்திலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவு பொருட்கள் தயாரிக் கும் முறை பற்றி நேற்று ஒருநாள் பயிற்சி நடந்தது. இப்பயிற்சியை நிலையத் தலைவர் பேராசிரியர் வைரவன் தலைமையேற்று துவக்கி வைத்து பேசுகையில், புதுகை மாவட்டத்தில் 2,252 எக்டர் பரப்பளவில் மா பயிரிடப்படுகிறது. மா அறு வடை குறுகிய காலத்தில் மட்டும் உள்ளதால் 2,530 சதவீதம் மாம்பழம் வீணாகி போகிறது மற்றும் விவசாயிகள் மிகக் குறைந்த விலைக்கு விற்க நேரிடுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு இப்பகுதியில் உள்ள விவசாயிகளும் மாமரங்கள்

வைத்திருக்கும் உரிமையாளர்களும் தொழில் முனைவோராக மாற விருப்பம் உள்ளவர்களுக்கும் ஒரு நாள் இலவச பயிற்சி வேளாண் அறிவியல் நிலையம் ஏற்பாடு செய்திருக்கிறது. இதுவரை நமது முன்னோர்களும் நம் சந்ததியில் உள்ளவர்களும் மாம்பழம் பயன் படுத்துவதோடு மாங்காய் ஊறுகாய், மாவடு வற்றல் தயாரிப்பது வரை மட்டும்தான் பயன்படுத்தியிருக்கிறோம். ஆனால், இதில் நூற்றுக்கணக்கான உணவு முறைகளைச் செய்யலாம். அவற்றில் பலவும் நம் முன்னோர்கள் பயன்படுத்தியதுதான் என்றாலும் இப்போதுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியைக் கொண்டு என்னவெல்லாம் செய்ய முடியும் என்பதை அனைவ ரும் அறிந்திருக்க வேண்டும். மாம்பழத்தை கொண்டு பலவிதமான உணவு பொருட்கள் தயாரிப்பது பற்றியும் அதிக விளைச்சல் உள்ள காலங்களில் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யவும் பழங்களை மதிப்பூட்டப்பட்ட பொருட்களாக தயாரித்து அதிக லாபம் ஈட்டலாம். இதற்காக வம்பன் அறிவியல் நிலையப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் பயிற்சியாளர்களும் பயிற்சியளிக்கின்றனர். அதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். மேலும் இதற்கான தொழில்நுட்பங்களை விரிவாக தெரிந்து கொள்ள வேளாண் அறிவியல் நிலையத்தினை அணுகி பயன்பெற வேண்டும் என்றார். இப்பயிற்சியின்போது பயிற்சியாளர்கள் மதிப்பூட்டப்பட்ட பொருட்களை தயாரிக்கும் செய்முறை விளக்கங்களை அளித்துடனும் உடனடி பழப்பானம், பழக்கூழ் மற்றும் பதப்படுத்தும் முறை, பழ பவுடர் தயாரித்தல் ஆகியவற்றினை செய்முறை விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கங்கள் கொடுக்கப்பட்டது. பயிற்சியில் புதுக் கோட்டை, ஆலங்குடி, வட காடு, தெட்சிணாபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயன்பெற்றனர். ஏற்கனவே பயிற்சி பெற்ற விவசாயி கணேசன் தொழில் முனைவோர்க் கான திறன்கள் குறித்து விவசாயிகளிடம் பகிர்ந்து கொண்டார். மேலும் அவர் தயாரித்த உணவுப் பொருட்களையும் பார்வைக்கு வைத்து விளக்கினார். உதவிப் பேராசிரியர் கீதா பயிற்சி ஏற்பாடுகளை செய்திருந்தார்.

**<u>மண்வளம் காக்க பசுந்தாள் உரமிடுவது அவசியம் வேளாண் அலுவலர் அறிவுறுத்தல்</u>**

அறந்தாங்கி, : அறந்தாங்கி வட்டார விவசாயிகள் நடப்பு சம்பா பருவத்தில் நெல் சாகுபடியில் அதிக மகசூல் எடுக்கவும், மண்வளம் காக்கவும் பசுந்தாள் உரமிடுவது அவசியம் என அறந்தாங்கி வேளாண் உதவி இயக்குனர் பொன்னையா தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: பசுந்தாள் உர பயிர்களில் முக்கியமானவை சணப்பு, தக்கைபூண்டு மற்றும் கொளுஞ்சி ஆகியவையாகும். இவற்றில் சணப்பு எல்லாவகை நிலங்களிலும், தக்கைப்பூண்டு களர் உவர் நிலங்களிலும் நன்கு வளரும் தன்மையுடையது. இந்த பயிர்கள் பயறுவகை குடும்பத்தை சேர்ந்ததால் இவற்றின் வேர் முடிச்சில் தழைச்சத்தை கிரகித்து மண்ணால் சேமிக் கும் தன்மையுடையன. பசுந்தாள் உர பயிர்களை 40 முதல் 60 நாட்கள் வரை வளர்த்தால் அதிக பசுந் தழை கிடைக்கும். ஆனால், நீண்ட நாட்கள் வளர்ந்த பசுந்தாள் உர பயிரில் நார்த்தன்மை அதிகமாகி மக்கும் தன்மை குறையும். இதனை சேற்றில் மடக்குவது சிரமமாகும். எனவே பசுந்தாள் உர பயிர்களை 35 முதல் 45 நாட்கள் அல்லது பூக்கும் தருணத்திற்கு முன்பு மடக்கி உழுவது எளிதாகும். இவ்வாறு மடக்கி உழும்போது மண்ணிலுள்ள கண்களுக்கு புலப்படாத பல கோடி நுண்ணுயிர்களால் தாக்கப்பட்டு பசுந்தாள் உர பயிர்களில் உள்ள பேரூட்டங்கள் மற்றும் நுண்ணூட்ட சத்துக்குள் வெளியாகி பயிர்கள் செழித்து வளர உதவுகின்றன. மேலும் நுண்ணுயிர்களின் பெருக்கம் அதிகரிக்கும்போது அவைகளில் இருந்து பலவிதமான அங்கக அமிலங்கள், வளர்ச்சி ஊக்கிகள் வெளியிடப்படுகின்றன. இவை மண்ணில் கரையாத நிலையிலுள்ள ஊட்டச்சத்துக்களை கரைத்து பயிர்களுக்கு எளிதில் கிடைக்க செய்கிறது. மேலும் பசுந்தாள் உர பயிர்களை மடக்கி உழுவதால் மண்ணின் இறுக்கத்தை குறைக்கிறது. மண்ணின் நீர்ப்பிடிப்பு தன்மையை அதிகரிக்கிறது. பசுந்தாள் உரப்பயிர்களை பயிரிடுவதால் இவை வளர்ந்து மண் போர்வை போல் செயல்பட்டு நீர் ஆவியாவதை தடுக்கிறது. மண்ணின் அடியிலுள்ள கேடு விளைவித்திடும் உப்புகள் மேல் மட்டத்திற்கு வராமல் தடுக்கிறது. பசுந்தாள் உர பயிர்களை சாகுபடி செய்ய இயலாத சூழ்நிலையில் வயலை சுற்றி வளர்ந்துள்ள எருக்கு, நொச்சி, புங்கம், கிளைரிசிடியா மற்றும் வாதநாராயணன் ஆகிய மரங்களின் தழைகளை வெட்டி நடவு வயலில் இட்டு மக்க வைத்து பின் நடவு செய்யலாம். அறந்தாங்கி வேளாண் விரிவாக்க மையத்தில் தேவையான தக்கை

பூண்டு விதைகள் இருப்பு வைக்கப்பட்டு 50 சதவீத மானிய விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ.35 வீதம் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எனவே விவசாயிகள் இதனை வாங்கி பயன்பெறுங்கள். இவ்வாறு அறந்தாங்கி வேளாண் உதவி இயக்குனர் பொன்னையா தெரிவித்துள்ளார்.

**<u>சோளத்தில் குருத்துப்பூச்சி கட்டுப்படுத்தும் வழிமுறை வேளாண் அதிகாரி ஆலோசனை</u>**

கொள்ளிடம், : சோளப்பயிரில் குருத்துப்பூச்சி கட்டுப்படுத்தும் வழி முறையை கொள்ளிடம் வேளாண் அதிகாரி விளக்கி உள்ளார். நாகை மாவட்டம் கொள்ளிடம் அருகே சந்தப்படுகை கிராமத்தில், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் புல இறுதியாண்டு மாணவிகள் தங்கி பயிற்சி பெறும் ஊரக வேளாண் பணி அனுபவ துவக்கவிழா நேற்று நடைபெற்றது. செம்பனார்கோவில் தோட்டக்கலை உதவி இயக்குநர் கணேசன் தலைமை வகித்தார். மாணவி இனியபொன் மொழி வரவேற்றார். அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்துறை உதவி பேராசிரியர்கள் சண்முகராஜன், சுஜய்வேலு முன் னிலை வகித்தனர். கொள் ளிடம் வேளாண் அலுவலர் சதீஷ்குமார் கலந்து கொண்டு, சிறப்புரையாற்றினார். வேளாண் உதவி இயக்குநர் கணேசன் பேசுகையில், சோளத்தை தாக்கும் குருத்துப்புழுவை கட்டுப்படுத்த, வேப்பங்கொட்டை தூளை மணலுடன் கலந்து, குருத்தில் போட்டால், குருத்துப்புழுக்களை எளிதில் அழிக்கலாம். தற்பொழுது இயற்கை விவசாயத்திற்கு விவசாயிகள் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். மாமல்லபுரத்திலிருந்து, கடற்கரைசாலையில் தோட்ட பயிற்சாகு படி நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில் சிறப்பாக நடைபெற ஆரம்பித்துள்ளது. பணி ஓய்வு பெற்றவர்களும், தற்பொழுது விவசாயத்தை நோக்கி திரும்பிக்கொண்டிருக்கின்றனர். விவசாயம் தமிழ் நாட்டில் வேகமாக வளர் ந்து கொண்டிருக்கிறது என்றார். கொள்ளிடம் ஆத்மா திட்ட அலுவலர் ரேகா, தோட்டக்கலை உதவி அலுவலர்கள் செல்வராஜ், கென்னடி, பள்ளி தலைமையாசிரியர் நடராஜன், பெற்றோர், ஆசிரியர் கழகத் தலைவர் சிவானந்தம், துணை தலைவர் மணிமாரியப்பன், ஊராட்சிமன்ற துணை தலைவர் முத்துவேலன், விழா விவாதக்குழு அமைப்பாளர் பன்னீர்செல்வம், விவசாயிகள் மாசிலாமணி, மனோகரன், தமிழ்நாடு, ஆந்திரா, அருணாச்சலபிரதேசம் ஆகிய

பகுதிகளைச் சேர்ந்த 20 மாணவிகள் கொண்ட குழுவினர் மற்றும் ஊர்ப்பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். தோட்டப்பயிர் விதை கள் 50 சத மானியத்தில் வழங்கப்பட்டன. முடிவில் அண்ணாமலைபல்கலைக்கழக வேளாண் துறை மாணவி ஹரிபிரியா நன்றி கூறினார். இது குறித்து மாணவிகள் கூறுகையில், கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் மூன்று மாதங்கள் தங்கி பயிற்சி பெற உள்ளோம். நாங்கள் கற்றவைகளை தெரிவித்தும், விவசாயிகளிடம், வயல்களில் நேரில் சென்று பணியில் ஈடுபட்டு அனுபங்களை தெரிந்து கொள்வோம் என்றனர்.

**<u>செம்பனார்கோவில் ஒன்றியத்தில் குறுவை தொகுப்பு திட்டத்தில் ரூ.1.50 கோடியில் இடுபொருள்விவசாயிகளுக்கு வழங்கல்</u>**

தரங்கம்பாடி, : செம்பனார்கோவில் ஒன்றியத்தில் குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தில் விவசாயிகளுக்கு ரூ.1.50 கோடி மதிப்பில் வேளாண் இடுபொருள் வழங்கப்பட்டுள்ளது. நாகை மாவட்டம் திருக்கடையூர் அரசு விதைப்பண்ணையில் விவசாயிகளுக்கு 100 சதவீத மானிய த்தில் இடுபொருள் வழங்கும் விழா நடைபெற்றது. நாகை வேளாண் இணை இயக்குனர் பன்னீர்செல்வம் தலைமை வகித் தார். செம்பனார்கோவில் வேளாண் உதவி இயக்குனர் வெற்றிவேலன் வரவேற்றார். ஒன்றியக்குழு தலைவர் ஜனார்த்தனம் 100 சதவீத மானியத்தில் மூன்று குழுக்களுக்கு தலா ரூ.2 லட்சம் மதிப்பில் நெல் நடவு இயந்திரம், 120 விவசாயிகளுக்கு 200 கிலோ ஜிப்சம் வழங்கினார். விழாவில் வேளாண் கூடுதல் இயக்குனர் ராதாகிருஷ்ணன் பேசியது: அதிக மகசூல் பெறும் விவசாயிக்கும், குறைந்த மகசூல் பெறும் விவசாயிக் கும் உள்ள இடைவெளியை குறைப் பதே வேளாண் துறையின் முக்கிய நோக்கம். ஒரு ஏக்கரில் 3 முதல் 4 மெட்ரிக் டன் வரை நெல் மகசூல் பெற வேண்டும். செம்பனார்கோவில் ஒன்றியத்தில் விவசாயிகளுக்கு முதல்வர் அறிவித்துள்ள குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தின் கீழ் ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் மதிப்பில் இடு பொருள் வழங்கப்பட்டுள்ளது என்றார். விதைச்சான்று அலுவலர் சுப்பையன், துணை வேளாண் அலுவலர் கண்ணன் உள்ளிட்டோர் பேசினார். வேளாண் அலுவலர் கனகம் நன்றி கூறினார்.

## பெரியகுளம் அருகே விவசாயிகளுக்கு வயல்வெளிப்பள்ளி

பெரியகுளம், : பெரியகுளம் அருகே வடபுதுப்பட்டியில் வேளாண்துறையின் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக் கான வயல்வெளிப்பள்ளி நடந்தது. உதவி வேளா ண்மை இயக்குநர் பெரியகருப்பன் தலைமை வகித்து துவக்கி வைத்தார். தொழில்நுட்ப மேலாளர் உஷா வரவேற்றார். குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்ப கல்லூரியை சேர்ந்த பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் முத்துக்குமார் மக்காச்சோளத்தில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை பற்றி விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். இதில் அட்மா தொழில்நுட்ப வல்லுநர்கள் அருணா, மணிகண்டன் பேசினர். நிகழ்ச்சியில், வேளாண்மை தொழில்நுட்ப கல்லூரியை சேர்ந்த இறுதியாண்டு மாணவிகள் தீபிகா, தேவி சந்திரவதனா, மதுபாலா, சத்யா, ஜூது, கீர்த்தி,அஞ்சிதா ஆகியோர் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் இப்பயிற்சியில் கலந்து கொண் டனர். நிகழ்ச்சியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## காப்பி விவசாயிகளுக்கு மாணவிகள் செயல்விளக்கம்

போடி, : போடி அருகே குரங்கணியில் காப்பி வாரியம் மற்றும் மதுரை வேளாண்மை கல்லூரி சா£பில் காப்பி விவசாயம் குறித்த பயிற்சி நடந்தது. போடி மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் குரங்கணி மலைக்கிராமத்தில் மத்திய அரசின் காப்பி வாரியம் இயங்கி வருகிறது. இங்கு பல ஏக்கர் நிலப் பரப்பில் காப்பி விவசாயம் செய்து வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக இந்த விவசாயிகள் பல்வேறு வகையில் நஷ்டம் அடைந்து வந்தனர். இதனை கருத்தில் கொண்டு மதுரை வேளாண்மை கல்லூரி மாணவிகளான ஹேமாவதி, கலைவாணி, கலாமணி, கார்த்திகா, கார்த்திகேயனி, மீனா, மீனாபிரியா ஆகியோர் காப்பி விவசாயம், சாகுபடி முறைகள், நோய் தாக்குதலை சமாளிக்கும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறினர். காப்பி வாரிய அலுவலர்கள் கார்த்திகேயன், பவித்ரன் உடன் இருந்தனர்.

## பெருஞ்சாணி அணை மூடப்பட்டது

நாகர்கோவில், : குமரி மாவட்ட அணைகளில் இருந்து தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருவதால் நீர்மட்டம் சரிந்து வருகிறது. இந்தநிலையில் பெருஞ்சாணி அணை திடீரென்று மூடப்பட்டுள்ளது. நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 10.35 அடியாக இருந்தது. அணைக்கு 431 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருந்தது. 616 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்தது. பெருஞ்சாணி நீர்மட்டம் 35.05 அடியாக இருந்தது. அணைக்கு 73 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. சிற்றார்-1ல் 7.54 அடியும், சிற்றார்-2ல் 7.64 அடியும், பொய்கையில் 3.30 அடியும், மாம்பழத்துறையாறு அணையில் 45.60 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது. நேற்று காலை நிலவரப்படி சிற்றார் அணைப்பகுதியில் மட்டும் 1.8 மி.மீ மழை பதிவாகி இருந்தது.

## குமரியில் பால் உற்பத்தியை பெருக்க மானிய விலையில் கால்நடை தீவனங்கள் கலெக்டர் தகவல்

நாகர்கோவில், : குமரி மாவட்ட கலெக்டர் நாகராஜன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: பால் உற்பத்தியை பெருக்கும் வகையில் நடப்பு நிதியாண்டில் அதிக மகசூல் தரக் கூடிய கம்பு நேப்பியர் தீவனப்பயிர் இறவையில் 0.25 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்திட ரூ.2 ஆயிரம் மானியமும், மானாவரியில் 0.25 ஏக்கர் பரப்பில் தீவனச்சோளம், தட்டைப்பயறு சாகுபடி செய்திட ரூ.550 மானியமும், தெளிப்பு நீர்பாசன கருவிகள் நிறுவு வதற்குரூ18,750அதாவது 75 சதவீத மானியமும் வழங்கப்படு கிறது. மேலும் அகத்தி மரவகை தீவனபயிர் சாகுபடி செய் திட 100 சதவீத மானியத் துடன் அகத்தி விதைகள் விநியோகம் செய்திடவும், அசோலா திடல் அமைக்க ரூ1600 மானியமும் வழங்கப்பட உள்ளது. இந்த திட்டத்தில் பயன்பெற விருப்பமுள்ள கால்நடை வளர்ப்பு விவசாயிகள் தங்களது பகுதியில் உள்ள, கால்நடை உதவி மருத்து வரை நேரில் தொடர்பு கொண்டு எழுத்து மூலமாக விண்ணப்பித்து பயன் பெறலாம். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

## சம்பா சாகுபடிக்கு விதை நெல் மூட்டைகள் தயார்

காட்டுமன்னார்கோவில் : காட்டுமன்னார்கோவில் விவசாயிகள் நெல் சாகுபடியில் அதிகம் பேர் ஈடுபட்டுள்ளனர். சம்பா சாகுபடியின் போது ஆந்திரா

பொன்னி என்ற நெல் ரகம் கடந்த 2 ஆண்டுகளாக சாகுபடி செய்து வருகின்றனர். கடந்த காலங்களில் பொன்மணி என்ற மோட்டா ரகத்தை பயிர் செய்தனர். இந்த மோட்டா ரக நெல்லுக்கு கூடுதல் விலை கிடைக்கவில்லை. இதை கருத்தில் கொண்டு விவசாயிகள் புதிய ரகமான ஆந்திரா பொன்னி என்ற பிபிடி நெல் ரகத்தை பயிர் செய்கின்றனர். 62 கிலோ மூட்டை ரூ. 900 லிருந்து 1,400 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால் இந்த ஆண்டும் சம்பா சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஈடுபட உள்ளதால் வெளி மாநிலத்திலிருந்து ஆந்திரா பொன்னி நெல் விதை நெல் மூட்டைகள் விற்பனைக்காக கடந்த 3 தினங்களாக அதிக அளவில் வந்து இறங்கியுள்ளது.

## <u>மல்லிகை செடிகளுக்கு உரம் இடும் முறை</u>

விருத்தாசலம், : விருத்தாசலம் தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிமொழி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்கூறியிருப்பதாவது: கம்மாபுரம் வட்டார விவசாயிகளின் கவனத்திற்கு, மல்லிகை செடிக்கு உரமிட இதுவே முக்கிய தருணமாகும். எனவே மல்லிகை பயிர் செய்துள்ள விவசாயிகள் முக்கிய சத்துக்களான தழை, மணி, சாம்பல் ஆகியவற்றை 60:120:120 என்ற விகிதாச்சாரத்தில் முதல் தவணையாக யூரியா 65 கிராம், பாஸ்பரஸ் 370 கிராம், பொட்டாஷ் 100 கிராம், ஒரு செடிக்கு என்ற அளவில் செடியில் இருந்து 30 செமீ தள்ளி வட்ட வடிவ பாத்திகளில் இட்டு நீர் பாய்சுதல் வேண்டும். மேலும் முல்லை பயிர் செய்துள்ள விவசாயிகள் 120:240:240 என்ற விகிதாச்சாரத்தில் முதல் தவணையாக யூரியா 130 கிராம், பாஸ்பரஸ் 740 கிராம், பொட்டாஷ் 200 கிராம் என்ற அளவில் செடியில் இருந்து 30 செமீ தள்ளி வட்ட வடிவ பாத்திகளில் இட்டு அதனுடன் 10 கிலோ தொழு உரமும் இட்டு நீர் பாய்ச்சி பயனடையலாம் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## <u>கடலூர் மாவட்டத்தில் கோழி பண்ணை அமைக்க மானியம்</u>

கடலூர், : கடலூர் மாவட்ட கலெக்டர் சுரேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: தமிழக அரசு சிறப்பு கோழி வளர்ப்பு திட்டத்தின் கீழ் கடலூர் மாவட்டத்தில் இறைச்சி கோழி வளர்ப்பு திட்டத்தை மானிய உதவியுடன் செயல்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர் 5

ஆயிரம் கோழிகளை வளர்த்து பயனடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி 2014-15ம் ஆண்டில் 50 அலகுகள் கடலூர் மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயனடைய விரும்பும் பொதுமக்கள் வங்கி மூலம் கடன் பெற்றோ அல்லது சொந்த முதலீட்டில் கொட்டகை அமைத்த பிறகு அரசு அறிவித்துள்ள 25 சதவீத மானியம் அவர்களுக்கு வழங்கப்படும். திட்டம் செயல்படுத்திய பிறகு கோழி வளர்ப்பு நிறுவனத்தார் மூலம் குஞ்சுகள் வழங்கப்பட்டு அவர்களே பராமரிப்பு செய்து கொள்முதல் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. வங்கி மூலம் கடன் பெறும் பயனாளிகளுக்கு அரசு வழங்கும் 25 சதவீதம் முன் மானியத்துடன் நபார்டு வங்கி மூலம் 25 சதவீதமும் பின் மான்யமும் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் இறைச்சி கோழிகள் பராமரிக்கும் திட்டம் கொண்ட ஒரு அலகிற்கு மொத்த முதலீடான ரூ.10 லட்சத்து 75 ஆயிரத்தில் 25 சதவீதம் அரசின் முன் மானியமான தொகை ரூ.2 லட்சத்து 68 ஆயிரமும், வங்கி கடன் மூலம் பயனடையும் பயனாளிகளுக்கு மேற்கூறிய அரசு மானியத்துடன் நபார்டு வங்கி மூலம் 25 சதவீதம் மானியமாக ரூ.2 லட்சத்து 68 ஆயிரமும் வழங்கப்படும். பொது மக்கள் இத்திட்டத்தின் கீழ் மூலம் பயன்பெறவும் இது சம்பந்தமாக தெளிவுரைகளுக்கு அருகில் உள்ள கால்நடை நிலையங்களை அணுகலாம். இவ்வாறு கூறி உள்ளார்.

**<u>வயல்களுக்கு ஏற்ற சத்துள்ள வண்டல் மண்ணை ஏரியில் இருந்து எடுக்க அனுமதி குறை தீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்</u>**

பெரம்பலூர், : வயல்களுக்கு ஏற்ற சத்துள்ள வண்டல் மண்ணை ஏரிகளில் இருந்து எடுப்பதற்கு முறையான அனுமதி தர வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்டம், செட்டிக்குளத்தில் நேற்று நடைபெற்ற குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர். செட்டிக்குளத்தில் உள்ள வெங்காய வணிக வளாகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்துக்கு கலெக் டர் தரேஸ் அஹமது தலை மை வகித்தார். டிஆர்ஓ ராஜன் துரை, சப்-கலெக்டர் மதுசூதனன் ரெட்டி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) கனகசபை, துணை இயக்குநர் அய்யா சாமி, மின் வாரிய மேற் பார்வை பொறியாளர் வளர்மதி, தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் இந்திரா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகளும், அவர்களது

பிரதிநிதிகளும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர். கூட்டத்தில், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் செல்லதுரை பேசியதாவது: பெரம்பலூர் மாவட்டத்தில் மிக அதிகமாக உற்பத்தியாகும் சின்ன வெங்காயம், பருத்தி, மக்காச்சோளம் ஆகியவற்றை வெளிமாவட்டங்களுக்கு கொண்டுசென்று விற்றால் மூட்டைக்கு ரூ100இழப்பு ஏற்படுகிறது. சீனாவைப் போல் வேளாண் விளைப்பொருட்களை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றி, கூடுதல் விலை கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். இதற்காக புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள உழவர் உற்பத்தி நிறுவனத்தை துரிதமாக பதிவுசெய்து முறைப்படி இயங்க உதவ வேண்டும். கடந்த ஆண்டைப் போலவே வறட்சியால் பாதிக்கப்பட்ட பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளுக்கு அதிகப்படியான இழப்பீட்டுத் தொகையை பெற்றுத்தர வேண்டும்.பால் விலையை லிட்டருக்கு ரூ3 வரை உயர்த்தி வழங்க வேண்டும். மாவட்டம் முழுவதும் ஆய்வுசெய்து பழுதடைந்த நிலையில் உள்ள பழைய மின்மாற்றி, மின் கம்பங்கள், மின் கம்பிகளை சீரமைக்க வேண்டும். பதிவு செய்து 7ஆண்டுகளாகக் காத்தி ருக்கும் விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப் பு வழங்கவேண்டும் என்றார்.தமிழ்நாடு கரும்பு உற்பத்தியாளர்கள் சங்க மாவட்டத் தலைவர் ஏ.கே.ராஜேந்திரன்: மலையாளப்பட்டி பச்சைமலை அடிவாரத்தில் நீரோட்டம் உள்ள சின்னமுட்லு பகுதியில் புதிய நீர்த்தேக்கம் அமைக்க வேண்டும். வி.களத்தூர் கல்லாற்றில் 3 இடங்களிலும், திருமாந்துறை வெள்ளாற்றில் 3 இடங்களிலும் தடுப்பணைகள் கட்டி தண்ணீரைச் சேமிக்க வேண்டும். ஏற்கனவே அறிவித்த படி கரும்புக்கு டன்னுக்கு ரூ.100 உயர்த்தித்தர வேண்டும். கரும்புக்கு கட்டுப்படியான விலை கிடைக்க முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்டவேண்டும். வயல்களுக்கு ஏற்ற சத்துள்ள வண்டல் மண்ணை ஏரிகளிலிருந்து எடுப்பதற்கு முறையான அனுமதி தர வேண்டும். வண்டல் மண்ணை நாங்கள் திருடிச் செல்லாதபோதும், எங்கள் வண்டி களை வருவாய்த் துறை யினர் பறிமுதல் செய்து ரூ25ஆயிரம் அபராதம் விதிப்பது ஏன்? என்று கேள்வி எழுப்பினார். கூட் டத்தில் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் துங்கபுரம் முருகேசன், மாணிக்கம், குரும்ப லூர் ராமசாமி, ரமேஷ், வேப்பந்தட்டை ஜெயராமன், பூலாம்பாடி வரதராஜன் அனைத் துத்துறை அரசுஅலுவலர்கள், திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவிகள் கலந்துகொண்டனர்.வளைகுடா நாடுகளுக்கு ஏற்றுமதி தமிழ்நாடு விவசாயிகள்

சங்க மாவட்டத் தலைவர் ராஜு: திண்டுக்கல், ஒசூர் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள் வளைகுடா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது போல், பெரம்பலூர் மாவட்டத்தில் உற்பத்தியாகும் காய்கறிகளையும் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். கைகளத்தூர் ஊராட்சி பாதாங்கி கிராமத்தில் பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்படுவது போல மாவட்டத்திலுள்ள 121ஊராட்சிகளி லும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்விநியோகிக்க ஏற்பாடுசெய்ய வேண்டும். பெரம்பலூர்- பெரிய வடகரை வழியாக கள்ளக்குறிச்சி வரையிலான சாலையை சீரமைக்க வேண்டும். பருத்தி, மக்காச்சோளம், வெங்காயத்தை இங்கிருந்து ஏற்றுமதி செய்ய வேண்டும் என்றார். குரங்கு விரட்டும் கருவி தமிழக விவசாயிகள் சங்க மாநிலச் செயலாளர் ராஜா சிதம்பரம் பேசுகையில், செட்டிக்குளம் பகுதிகளில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. மின் கம்பங்களில் தொங்கிக் கொண்டு தாவிச்செல்வதால் அடிக்கடி மின்கம்பிகள் பழுதாகின்றன. அவற்றை ஊராட்சி நிர்வாகம் சார்பாக சரிசெய்ய அனுமதிக்க வேண்டும். கோவை மாவட்டத்தில் உள்ளது போல், குரங்கு விரட்டும் கருவியை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்றார். தடுப்பணை தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் விசுவநாதன்: பெரம்பலூர் மாவட்டத்தில் பொதுப்பணித் துறை கட்டுப்பாட்டில் உள்ள 73 ஏரிகளில் 13 ஏரிகளைத் தூர்வார ஏற்பாடு செய்ததுபோல, மீதமுள்ள 60 ஏரிகளையும் விரைந்து தூர் வார வேண்டும். செட்டிக்குளம் சின்ன ஏரி, பெரிய ஏரிகளை தூர் வாரி, தண்ணீர் வெளியேறும் பாதையில் தடுப்பணை அமைத்திட வேண்டும் என்றார்.

**<u>கோதுமை, நெல் உள்ளிட்ட வேளாண் விளைப்பொருட்களுக்கு கூடுதல் விலை விவசாயிகள் கோரிக்கை</u>**

பெரம்பலூர், : கோதுமை, நெல் போன்ற வேளாண் விளைப்பொருட்களுக்கு மத்திய அரசு கூடுதல் விலை அறிவிக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். பெரம்பலூர் மாவட்டம், செட்டிக்குளத்தில் உள்ள வெங்காய வணிக வளாகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்துக்கு கலெக்டர் தரேஸ் அஹமது தலைமை வகித்தார். டிஆர்ஓ ராஜன்துரை, சப்- கலெக்டர் மதுசூதனன் ரெட்டி ஆகியோர் முன்னிலை

வகித்தனர். கூட்டத்தில் திரளாகப் பங்கேற்ற விவசாயிகள் பல்வேறு கோரிக்கைகள் குறித்து மனு அளித்தனர். அனைத்து விவசாயிகள் சங்கங்களின் சார்பில் நிர்வாகிகள் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது: வேளாண் பொருட்களுக்கு அரசியல் தலையீடு இல்லாமல் தன்னாட்சியாக செயல்படும் ஆணையம் மூலம் நியாயமான கட்டுப்படியான விலையை நிர்ணயம் செய்யும் முறையை அமல்படுத்த வேண்டும். நெல், கோதுமை உள்ளிட்ட விளைப்பொருட்களுக்கு கூடுதல் விலை அறிவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். உர மானியத்தை உயர்த்திக் கொடுத்து, உர விலை உயராமல் கடந்த 2010 மார்ச் 30ம் தேதி வரை கடைபிடித்துவந்த உர மானியக் கொள்கையை மத்திய அரசு அமல்படுத்த வேண்டும். தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தை தனிநபரும் பயன்படுத்த உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்றனர். கூட்டத்தில் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் ராஜா சிதம்பரம், செல்லதுரை, ஏகே.ராஜேந்திரன், துங்கபுரம் முருகேசன், கை.களத்தூர் ராஜு, வேப்பந்தட்டை ஜெயராமன், மாணிக்கம், விசுவநாதன், குரும்பலூர் ராமசாமி, ரமேஷ், பூலாம்பாடி வரதராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## <u>வேளாண் மையங்களில் தேவைக்கேற்ப இருப்பு வைத்து இடுபொருட்கள் வழங்க வேண்டும் அலுவலர்களுக்கு கலெக்டர் உத்தரவு</u>

அரியலூர், : அரியலூர் மாவட்டம், திருமானூர் ஏலாக்குறிச்சியில் உள்ள துணை வேளாண் விரிவாக்க மையத்தில் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்ட கலெக்டர் சரவணவேல்ராஜ், விவசாயிகளுக்குத் தேவை யான அளவுக்கு இடுபொருட்களை இருப்பு வைத்து வழங்க வேண்டும் என்று அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். திருமானூர் வட்டாரத்தில் உள்ள ஏலாக்குறிச்சி துணை வேளாண் விரிவாக்க மையக் கட்டிடம் பழுதடைந்துள்ளதால் செயல்படாத நிலையில் உள்ளதாக புகார் தெரிவித்த விவசாயிகள், உடனடியாக செப்பனிட்டோ அல்லது புதுப்பித்தோ வேளாண் விரிவாக்க மையத்தை செயல்பட வைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடந்த 18ம் தேதி அரியலூரில் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் சரவணவேல்ராஜிடம் கோரிக்கை வைத்தனர். இதைத் தொடர்ந்து, ஏலாக்குறிச்சியில் உள்ள துணை வேளாண் விரிவாக்க மையத்தில் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்ட கலெக்டர்

சரவணவேல்ராஜ், விவசாயிகளுக்குத் தேவை யான அளவுக்கு இடுபொருட்களை இருப்பு வைத்து வழங்கும் படி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். பின்னர் அவர் கூறியதாவது: விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் அளித்த கோரிக்கையின் பேரில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இம் மாவட்டத்தில் வேளாண் துறை மூலம் வட்டாரத்துக்கு 1 வீதம் 6 வேளாண் விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் 4 துணை வேளாண் விரிவாக்க மையங்கள் கீழப்பழூர், ஏலாக்குறிச்சி, மீன்சுருட்டி மற்றும் விக்கிரமங்கலம் ஆகிய இடங்களில் என மொத்தம் 10 வேளாண் விரிவாக்க மையங்கள் செயல்பட்டுவருகின்றன. வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் வேளாண் இடு பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ராபி பருவத்திற்கு தேவையான விதைகள் 210 மெ.டன் நெல் விதை, 4.2 மெ.டன் பயறு வகைள் மற்றும் 21.15 மெ.டன் நிலக்கடலை ஆகிய விதைகள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.மேலும், பயிர் பாதுகாப்புக் கருவிகள் உயிர் உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் நுண்ணூட்டங்கள் போதிய அளவு இருப்பில் வைக்கப்பட்டும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. அரியலூர் மாவட்டத்தில் வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களுக்கும் தேவையான வேளாண் இடுபொருட்கள், வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு பின்னர் விநியோகம் செய்யப்படுகின்றன.எனவே, அனைத்து விவசாய பெருமக்களும் தங்களுக்கு அருகாமையில் உள்ள வேளாண் விரிவாக்க மையத்தையோ அல்லது துணை வேளாண் விரிவாக்க மையத்தையோ அணுகி தங்களுக்குத் தேவையான இடுப்பொருட்களை கேட்டு பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

**திருப்பனந்தாள் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி ஏலம் வியாபாரிகள் பங்கேற்பு**

திருவிடைமருதூர், : திருவிடைமருதூர் அடுத்த திருப்பனந்தாள் ஒழுங்குமுறை கூடத்தில் பருத்தி ஏலம் நடந்தது. சராசரியாக ரூ.4,850க்கு விற்பனையாது. தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் அடுத்த திருப்பனந்தாள் ஒழுங்குமுறை

விற்பணை கூடத்தில் பருத்தி ஏலம் நடந்தது. சுற்று பகுதிகளை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் சாகுபடி செய்யப்பட்ட 400 குவிண்டால் பருத்தி பஞ்சுகளை கொண்டு வந்திருந்தனர். 425 லாட்டுகளில் வைக்கப்பட்டிருந்த பருத்தி பஞ்சுகளை விழுப்புரம், திருப்பூர், தேனி, செம்பனார்கோவில் பகுதிகளிலிருந்து வந்திருந்த வியாபாரிகள் தாங்கள் கேட்கும் விலையை மறைமுகமாக குறித்து ஏலப்பெட்டியில் போட்டனர். பின்னர் ஒழுங்குமுறை விற்பனை கூட மேற்பார்வையாளர் சங்கர் முன்னிலையில் பிரித்து பார்க்கப்பட்டது. அப்போது வியாபாரிகள் அதிகப்பட்ச ஏலத்தொகையாக குவிண்டாலுக்கு ரூ.5054, குறைந்த பட்சமாக ரூ.4,419, சராசரியாக ரூ.4,850க்கு விற்பனையானது. இதுதொடர்பாக விவசாயிகள் கூறுகையில், மின் தட்டுப்பாட்டால் பல்வேறு இன்னல்களை சந்தித்தோம். கடந்தாண்டு அதிகபட்சமாக ரூ.5.500 லிருந்து ரூ.6 ஆயிரம் வரை விலை போனது. இந்தாண்டு ரூ.4,400 முதல் ரூ.5 ஆயிரம் வரை விலை போகிறது. டிஏபி யூரியா உள்ளிட்ட உரங்கள் மற்றும் ஆள் சம்பளம் என பராமரிப்பு செலவு அனைத்தும் இருமடங்காக உயர்ந்துள்ளது. அதனால் குவிண்டால் குறைந்தபட்சமாக ரூ.6 ஆயிரம் முதல் ரூ.7 ஆயிரம் வரை விலை போனால் மட்டுமே கட்டுப்படியாகும் என்றனர்.

## வெங்காய சாகுபடியாளருக்கு சொட்டு நீர் பாசன பயிற்சி

அரியலூர், : தா.பழூர் ஒன்றியம், சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் வெங்காய சாகுபடியாளருக்கு சொட்டு நீர் பாசனம் குறித்து கள ஆய்வு பயிற்சி நேற்று அளிக்கப்பட்டது. அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியத்தில் இயங்கி வரும் சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியில் மையத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் ஆண்டிமடம் மற்றும் தா.பழூர் பகுதி விவசாயிகளுக்கு கள ஆய்வு குறித்த தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமில், திட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜ்கலா, தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் ராஜா ஜோஷ்லின், பூச்சியியல் தொழில்நுட்ப வல்லுநர் வேல்முருகன் ஆகியோர் சிறப்பு பயிற்சி அளித்தனர். தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் (பொ) சிவக்குமார் வெங்காய சாகுபடியில் சொட்டு நீர் பாசனம் குறித்து களத்துக்கு அழைத்துச் சென்று செயல் விளக்கம் அளித்தார். வேளாண் உதவி அலுவலர்கள்

திருநாவுக்கரசு, செல்வகுமார், சங்கர், இளையராஜா, அண்ணாதுரை, சாந்தி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு பால் குடுவைகள் வழங்கப்படும்: அமைச்சர் வி.மூர்த்தி</u>**

**சென்னை**

பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு ரூ.1.50 கோடியில் பால் குடுவைகள் (கேன்கள்) வழங்கப்படும் என்று பால்வளத்துறை அமைச்சர் வி.மூர்த்தி அறிவித்தார். சட்டப்பேரவையில் வெள்ளிக்கிழமை அமைச்சர் வி.மூர்த்தி வெளியிட்ட அறிவிப்புகள்: விருதுநகர், நீலகிரி, மற்றும் திருச்சி ஒன்றியங்களில் பாலில் இருந்து கொழுப்பு பிரித்தெடுக்கும் இயந்திரம், பால் பைகள் (பாக்கெட்டுகள்) தயாரிக்கும் இயந்திரம், கொதிகலன், பால் குளிரூட்டும் இயந்திரம், வெண்ணெய் தயாரிக்கும் இயந்திரம் ஆகியவை ரூ.1.84 கோடியில் நிறுவப்படும். இதன் மூலம் சுமார் 61 ஆயிரம் பால் உற்பத்தியாளர்களும் 1.50 லட்சம் நுகர்வோர் குடும்பத்தினரும் பயன்பெறுவர். தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் வழங்கும் உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் 125 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு 500 துருப்பிடிக்காத பால் குடுவைகளும் கால்நடை மருத்துவ சிகிச்சைக்குப் பயன்படும் கிட்டிகளும் ரூ.1.50 கோடி செலவில் ஆயிரம் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும். மாதவரம் பால் பண்ணையில் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், நீர் ஆதாரத்தை மேம்படுத்தவும் பழத்தோட்ட பகுதியில் ரூ.5 லட்சம் செலவில் மழைநீர் சேகரிக்கும் குட்டைகள் அமைக்கப்படும். விலைவாசி உயர்வைக் கருத்தில் கொண்டு தொடக்கப் பால் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சீருடைக்கான செலவு, தையல் கூலி ஆகியவை ஆண்களுக்கு ரூ.890-இல் இருந்து ரூ.1,200-ஆகவும், பெண்களுக்கு ரூ.790-இல் இருந்து ரூ.1,100-ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 20 ஆயிரம் பணியாளர்கள் பயனடைவர்.

**<u>ஆவின் பால் உற்பத்தியாளர்களுக்கு பல்வேறு சலுகைகள்: அமைச்சர் வி.மூர்த்தி</u>**

**சென்னை**

பால் உற்பத்தியாளர்களுக்கு ஆவின் நிறுவனமே அதிக சலுகைகள் தருவதாக பால் வளத்துறை அமைச்சர் வி.மூர்த்தி கூறினார்.

சட்டப்பேரவையில் வெள்ளிக்கிழமை பால்வளத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் மார்க்சிஸ்ட் சட்டப்பேரவை உறுப்பினர் ராமமூர்த்தி பேசியது: ஆவின் நிறுவனத்தை விட தனியார் நிறுவனத்துக்கே பால் உற்பத்தியாளர்கள் அதிக அளவில் பால் கொடுக்கக் கூடிய நிலை இருக்கிறது என்றார். அப்போது அமைச்சர் வி.மூர்த்தி குறுக்கிட்டுப் பேசியது:

பால் உற்பத்தியாளர்களுக்கு ஆவின் நிறுவனமே அதிக சலுகைகளை வழங்குகிறது. தனியார் நிறுவனங்கள் எந்தச் சலுகையையும் வழங்கவில்லை. பால் உற்பத்தியிலும் வறட்சிக் காலம். வரத்துக் காலம் என்று உண்டு. வறட்சிக் காலத்தில் பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து பால் வாங்க முற்படுவதும், வரத்து அதிகம் உள்ள காலத்தில் உற்பத்தியாளர்களிடம் இருந்து பால் வாங்காமல் இருப்பதுமே தனியாரின் நிலையாக இருக்கிறது. ஆனால் பல்வேறு சலுகைகளை வழங்கி, எல்லாக் காலங்களிலும் ஆவின் நிறுவனமே உற்பத்தியாளர்களிடம் இருந்து பாலை கொள்முதல் செய்கின்றன.

பாலபாரதி (மார்க்சிஸ்ட்): தேர்தல் நேரத்தில் தனியார் பாலின் விலை உயர்த்தப்பட்டது. ஆனால் அரசு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.அமைச்சர் வி.மூர்த்தி: தனியார் நிறுவனத்தின் பால் விலையை அரசால் கட்டுப்படுத்த முடியாது. அதனால் ஆவின் பால் வாங்குவதே நல்லது என்றார் அவர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 71 அடியாக உயர்வு

தங்கராஜா, சேலம்

**மேட்டூர்,** அணையில் நீர் மட்டம் இன்று காலை 8 மணி நிலவரப்படி 71.05 அடியாக உயர்ந்துள்ளது. அணையில் நீர் இருப்பு 33.60 டி.எம்.சியாக உள்ளது. அணைக்கு விநாடிக்கு 36,772 கன அடி வீதம் நீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 800 கன அடி வீதம் நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

**டெல்டா பகுதியில் மீத்தேன் வாயு திட்டத்தைக் கைவிட வேண்டும்: மத்திய அரசுக்கு வலியுறுத்தல்**

புது தில்லி



தில்லியில் மத்திய பெட்ரோலியம், இயற்கை எரிவாயுத் துறை இணையமைச்சர் தர்மேந்திர பிரதானை திமுக மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி தலைமையில் வெள்ளிக்கிழமை சந்தித்த "டெல்டா புலிகள்' அமைப்பினர்.

தமிழகத்தின் காவிரி டெல்டா மாவட்டங்களில் மீத்தேன் வாயு எடுக்கும் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று மத்திய அரசுக்கு "டெல்டா புலிகள்' அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுதொடர்பாக மாநிலங்களவை திமுக உறுப்பினர் கனிமொழி தலைமையில் இந்த அமைப்பினர் தில்லியில் இயற்கை எரிவாயுத் துறை இணையமைச்சர் தர்மேந்திர பிரதானை வெள்ளிக்கிழமை சந்தித்து மனு அளித்தனர். பின்னர் இந்த அமைப்பின் தலைமை ஒருங்கினைப்பாளர் கணேச மூர்த்தி செய்தியாளர்களிடம் கூறியது: காவிரி டெல்டா மாவட்டங்களில் சதுப்புநிலக் காடுகள், பறவைகள் சரணாலயம் உள்பட இயற்கை வளங்கள் நிறைந்த பகுதிகள் உள்ளன. இங்குள்ள மக்கள் விவசாயத்தை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். இந் நிலையில், நிலத்தடியில் உள்ள மீத்தேன் வாயுவை எடுக்க தனியார் நிறுவனத்துக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இது மக்களின் அடிப்படை வாழ்வைப் பாதிக்கும். இத் திட்டத்தை செயல்படுத்தினால் இயற்கை வளங்கள் அழிவதுடன், மக்களால் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்படும். இத் திட்டத்துக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இருப்பினும் இதைச் செயல்படுத்த மத்திய அரசு முனைப்புக் காட்டி வருகிறது. எனவே, இத் திட்டத்தை செயல்படுத்தினால், இப் பகுதியில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து அமைச்சரிடம் விளக்கினோம். எங்களின் கோரிக்கைகளை கேட்டறிந்த அமைச்சர், மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் கண்டறிய காவிரி டெல்டா பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ள தொழில்நுட்பக் குழுவினர் விரைவில் அனுப்பப்படுவர் என்று உறுதியளித்தார்' என்றார் கணேச மூர்த்தி. முன்னதாக இந்த அமைப்பினர் கனிமொழி தலைமையில் மத்திய சுற்றுச்சூழல், வளங்கள் துறை இணையமைச்சர் பிரகாஷ் ஜாவடேகரையும் வியாழக்கிழமை சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். பின்னணி: காவிரி டெல்டா பகுதிகளான திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் நிலத்தடியில் உள்ள மீத்தேன் வாயுவை கிணறுகள் தோண்டி எடுக்க, "கிரேட் ஈஸ்ட்ர்ன் எனர்ஜி கார்ப்பரேஷன்' என்ற தனியார் நிறுவனத்துக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கடந்த 2010-இல் அனுமதி அளித்தது. அதன்படி, இந் நிறுவனம் டெல்டா பகுதிகளில் மீத்தேன் வாயுவை எடுக்க 30 ஆண்டுகள் குத்தகை பெற்றது. இந் நிலையில், இத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் காவிரி டெல்டா பகுதிகளில் விவசாயம், சுற்றுச்சூழல் ஆகியவை பாதிக்கப்படும் என்று கூறி இயற்கை வேளான் விஞ்ஞானி நம்மாழ்வார் தலைமையில் மக்கள் பல போராட்டங்களில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து, தனியார் நிறுவனம் மேற்கொண்ட கிணறுகள்

தோண்டும் பணிக்கு தாற்காலிகத் தடை விதித்து முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அரசு கடந்த ஆண்டு உத்தரவிட்டது. மேலும்,ஆய்வு மேற்கொள்ளவும் தொழில்நுட்பக் குழுக்களை அமைத்தது.

**<u>வீணாகும் விளைபொருள்கள்: வேளாண் பல்கலை. துணைவேந்தர்</u>**

**மதுரை**

பதப்படுத்துதல் தொழில்நுட்பங்கள் பின்பற்றப்படாததால் ஏராளமான விளைபொருள்கள் வீணாகுகின்றன என்று, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கே. ராமசாமி தெரிவித்துள்ளார். உணவு பதப்படுத்தும் துறையின் எதிர்கால வாய்ப்புகள் என்ற தலைப்பில், மதுரை மாவட்ட சிறு, குறுந்தொழில்கள் சங்கம் (மடீட்சியா) மற்றும் தஞ்சாவூரில் உள்ள இந்திய பயிர் பதப்படுத்துதல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியன இணைந்து நடத்திய கருத்தரங்கைத் தொடங்கி வைத்து, அவர் மேலும் பேசியது:

நாட்டின் மக்கள் தொகை 33 கோடியாக இருந்தபோது, உணவு உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டது. அன்றைய சூழலில் வேளாண் துறையில் புகுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பங்களின் காரணமாக, உணவு உற்பத்தி பெருகியது.இப்போது, மக்கள் தொகை 100 கோடிக்கும் அதிகமாகிவிட்ட நிலையில், பஞ்சம் என்ற நிலை மாறி உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைந்திருக்கிறோம்.

அத்துடன், உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்களில் 33 சதவீதம் கிடங்குகளில் சேமிக்கப்படுகின்றன. ஆனால், அவற்றில் முறையான பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் பின்பற்றப்படாத காரணங்களால் 20 சதவீதம் வீணாகிவிடுகின்றன. வேளாண் விளைபொருள்களை மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்களாக மாற்றுவதற்கு, விவசாயிகள் தயாராக வேண்டும். அதிக மாவுச் சத்து கொண்ட நெல் ரகத்தை, வேளாண் பல்கலைக்கழகம் அறிமுகம் செய்துள்ளது. இத்தகைய புதிய ரகங்களையும், தொழில்நுட்பங்களையும் விவசாயிகள் பின்பற்றி லாபம் ஈட்டலாம். மதிப்புக்கூட்டு பொருள்கள் விற்பனைக்கும், குளிர்பதன வாகன வசதிக்கும் பல்வேறு திட்டங்கள் மூலமாக அரசு, விவசாயிகளுக்கு உதவி செய்கிறது. இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதேபோன்று, தங்களது பகுதிக்கு ஏற்ற பொருள்களை பதப்படுத்தும் தொழிலைத் துவங்கினால் லாபம் ஈட்ட முடியும் என்றார். இதில், இந்திய பயிர் பதப்படுத்துதல் தொழில்நுட்ப நிறுவன (ஐஐசிபிடி) இயக்குநர் கே. அழகுசுந்தரம், மடீட்சியா தலைவர் வி.எஸ். மணிமாறன், துணைத் தலைவர் கே.பி. முருகன் ஆகியோர் பேசினர். ஐஐசிபிடி பேராசிரியர்கள் சி.வி. கவிதா அபிராமி, என். வெங்கடாசலபதி, வி. ஹேமா ஆகியோர் பதப்படுத்துதல் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கவுரையாற்றினர். இக் கருத்தரங்கில்,

பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர், தொழில்முனைவோர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## விதை நெல்லுக்கு விலை கொடுப்பதில் பாரபட்சம்

**காஞ்சிபுரம்,**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விதை நெல்லுக்கு விலைக் கொடுப்பதில் வேளாண்துறை அதிகாரிகள் பாரபட்சம் காட்டுவதாக விவசாயிகள் குற்றஞ்சாட்டினர். காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு, மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் சம்பத்குமார் முன்னிலை வகித்தார். ஆட்சியர் வருவதற்கு முன்பு கூட்டம் தொடங்கியது. அப்போது விவசாயிகள் மற்றும் அதிகாரிகளுக்கிடையே காரசாரமாக நடந்த வாதம்:

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் நேரு: வேளாண்துறை, விவசாயிகளிடம் இருந்து விதை நெல் கொள்முதல் செய்கிறது. இவ்வாறு கொள்முதல் செய்யும் நெல்லுக்கு, சந்தை விலையைக் காட்டிலும் கூடுதலாக வழங்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விதை நெல்லுக்கு சீரான கொள்முதல் விலை இல்லை. ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விலையில் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் அதிகாரிகள் முறைகேட்டில் ஈடுபட வாய்ப்பு உள்ளது என்று பேசிக் கொண்டிருக்கும்போது, வேளாண்துறை இணை இயக்குநர் சீதாராமன், குறுக்கிட்டு பேசினார். இதற்கு, விவசாயிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். தொடர்ந்து கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து மாவட்ட வருவாய் அலுவலர் சம்பத்குமார் தலையிட்டு பிரச்னையை முடித்து வைத்தார். இதைத் தொடர்ந்து ஆட்சியர் வந்தார். காஞ்சிபுரம் மாவட்ட பாலாறு படுகை விவசாயிகள் சங்கத் தலைவர் பழையனூர் மணி: விவசாயிகளுக்கு விளை நிலத்துக்குத் தேவையான வண்டல் மண்ணை, ஏரிகளில் இருந்து, இலவசமாக எடுக்க ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆட்சியர்: விவசாயிகள் விளை நிலத்துக்குத் தேவையான வண்டல் மண் எடுக்க முறையான அனுமதி பெற வேண்டும். மணி: திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 2012-இல் விவசாயிகள் ஆண்டுக்கு 20 லோடு வரை வண்டல் மண் எடுக்க மாவட்ட நிர்வாகமே அனுமதி அளித்து ஆணை வெளியிட்டுள்ளது. அதைப் பின்பற்றினால் விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும்.

ஆட்சியர்: அது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மணி உள்ளிட்ட விவசாயிகள்: உத்தரமேரூர் பகுதி கரும்பு விவசாயிகள் விளைவித்த கரும்புகளை மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு விநியோகிக்க ஆட்சியர் உத்தரவிட வேண்டும். ஆட்சியர்: இதுகுறித்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசிடம் இருந்து முறையான பதில் வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகளின் பெரும்பாலான மனுக்களுக்கு பதில் அனுப்பப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் எந்த குறைகளுக்கும் முறையான பதில் அளிக்கப்படுவதில்லை. பரிசீலிக்கப்படும், நடவடிக்கை எடுக்கப்படும் என்று மட்டும் பதில் வருகிறது. ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. இது விவசாயிகள் குறைதீர் கூட்டம் இல்லை. விவசாயிகளுக்கு பதில் அனுப்பிவிட்டோம் என்று கூறும் கூட்டமாகத்தான் இருக்கிறது என்று விவசாயிகள் விரக்தியில் எழுந்துச் சென்றனர்.

## <u>வரத்து குறைவால் உயர்ந்தது தக்காளி விலை</u>!

**மதுரை**

ஆந்திராவில் இருந்து வரத்து குறைந்ததால் தக்காளி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதனால் குடும்ப பெண்கள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

காய்கறி சந்தையில் மற்ற காய்கறிகளை ஒப்பிடும் போது தக்காளி விலை ஏற்றத்தில் உள்ளது. கடந்த ஜூன் மாதத்தில் இருந்து இந்த விலை ஏற்றம் நீடித்து வருகிறது. கிலோ ரூ.10-க்கு விற்கப்பட்ட தக்காளி சந்தைகளில் ரூ.50 ஆகவும், நகர்ப்புற கடைகளில் ரூ.60 ஆகவும் உயர்ந்துள்ளது. கிராமப்புற கடைகளில் தக்காளி விலை ரூ.80 வரை விற்கப்படுகிறது. தக்காளி விலை உயர்ந்திருப்பது பெண்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது. ஆந்திராவில் இருந்து வரத்து குறைந்துள்ளதே தக்காளி விலை உயர்வுக்கு காரணம் என வியாபாரிகள் தெரிவித்தனர். வழக்கமாக தேனி, கம்பம், போடி பகுதிகளில் இருந்து நாட்டுத் தக்காளி வரும். இந்த சீசன் முடிந்து விட்டது. இதை ஈடுகட்ட ஆந்திராவில் இருந்து தக்காளியை அதிக அளவில் கொள்முதல் செய்வது வழக்கம். இந்த முறை ஆந்திராவில் எதிர்பாராத மழையால் தக்காளி வரத்து குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். மதுரை மாட்டுத்தாவணி காய்கறி வியாபாரிகள் நலச்சங்க செயலர் தியாகராஜன் இது குறித்து கூறியது: ஆந்திராவில் இருந்து மதுரைக்கு தினமும் 10 முதல் 20 லாரி லோடுகள் தக்காளி வந்தது. இப்போது 4 அல்லது 5 லாரி லோடுகளே வருகின்றன. ரூ. 250-ஆக இருந்த பெட்டி விலை தற்போது ரூ.600 வரை உயர்ந்துள்ளது. இதனால் விலை அதிகரித்துள்ளது. ஆனால் அதிர்ஷ்டவசமாக உடுமலைப்பேட்டையில் இருந்து தக்காளி வரத்து

தொடங்கியுள்ளது. இதனால் தக்காளி விலை குறைய வாய்ப்பு உள்ளது. மேலும் தேனி, போடி, உசிலம்பட்டி, நாச்சிபாளையம், செக்கானூரணி பகுதிகளில் இருந்து உள்ளூர் தக்காளி உற்பத்தி தொடங்கியவுடன் முன்பு போல் விலை மலிந்துவிடும் என்றார். இது போல், கேரட் விலையும் கிலோ ரூ.80 வரை உயர்ந்துள்ளது. வறட்சி காரணமாக கொடைக்கானலில் இருந்து கேரட் வரவில்லை. மேட்டுப்பாளையத்தில் இருந்து மட்டும் வருவதால் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## <u>பெரியாறு அணை நீர்மட்டம் உயர்வு:அரசுக்கு விவசாயிகள் நன்றி</u>

**தேனி**

தேனியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தியதற்கு விவசாயிகள் சார்பில் தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி தலைமை வகித்தார். வேளாண்மை இணை இயக்குநர் கோ.சுந்தரம், ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) எஸ்.ரங்கநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தியதற்கும், பெரியாறு பாசன கால்வாய்களை சீரமைக்க நிதி ஒதுக்கீடு செய்ததற்கும் விவசாயிகள் சார்பில் தமிழக அரசுக்கு நன்றி தெரிவிப்பதாக ஆட்சியர் கூறினார். ஆண்டிபட்டி வட்டாரத்தைச் சேர்ந்த 21 பேர் மற்றும் பெரியகுளம் வட்டாரத்தைச் சேரந்த 10 பேருக்கு உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை, 18 பேரின் குடும்பத்துக்கு ஈமக்கிரியை உதவித் தொகை ஆகியவற்றை ஆட்சியர் வழங்கினார். தேனி வட்டாரத்தைச் சேர்ந்த 5 பயனாளிகளுக்கு திருமண நிதி உதவி வழங்கப்பட்டது. வேளாண்மை விற்பனைக் குழு மேலாளர் செ.முத்தையா, தோட்டக்கலை துணை இயக்குநர் ராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## <u>காரைக்குடியில் மழை</u>

**காரைக்குடி**,

காரைக்குடியில் வெள்ளிக்கிழமை மிதமான மழை பெய்ததால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. கடந்த சில தினங்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டதால் வெப்பத்தால் மக்கள் அவதிப்பட்டு வந்தனர். மேக மூட்டம் ஏற்பட்டு மழை வருவது போல் இருந்தாலும், காரைக்குடி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் மழையின்றி கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் வெள்ளிக்கிழமை மாலை 6.15 மணிக்கு லேசான மழையாக பெய்யத் தொடங்கி பலத்த மழையாக மாறியது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்தது.

வாகனங்கள் ஊர்ந்து சென்றன. சுமார் முக்கால் மணி நேரம் மழை பெய்ததால் நகரில் ஓரளவு குளிர்ச்சி நிலவி வருகிறது. மேலும் காரைக்குடி சுற்று வட்டாரப் பகுதிகளிலும் மழை பெய்ததால் வெப்பம் தணிந்து குளிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

**கோழிக் கழிவுகளை அகற்றக் கோரிக்கை**

**திருப்புவனம்**

திருப்புவனம் அன்னை சிவபாக்கியம் மேல்நிலைப் பள்ளி அருகே உள்ள பள்ளங்களில் கோழி வியாபாரிகள் தங்கள் கடைகளில் உள்ள கழிவுகளை கொட்டுவதால் நோய் தாக்கும் அபாயம் இருப்பதால் அவற்றை அகற்ற பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். திருப்புவனத்திலுள்ள சிக்கன் கோழி வியாபாரிகள் தங்கள் கடைகளில் அகற்றப்படும் சிக்கன் கோழி கழிவுகளை மதுரை- ராமேசுவரம் நெடுஞ்சாலையில் திருப்புவனம் அன்னை சிவபாக்கியம் மேல்நிலைப் பள்ளி அருகே உள்ள சிறு பள்ளங்களில் கொட்டுகின்றனர். அந்த வழியாக ராமேசுவரம், ராமநாதபுரம், கீழக்கரை, பரமக்குடி, முதுகுளத்தூர், பார்த்திபனூர், கமுதி, வீரசோழன் உள்ளிட்ட பகுதிகளுக்கு அரசு மற்றும் தனியார் பேருந்துகள் சென்று வருகின்றன. மேலும் திருப்புவனம் அரசு போக்குவரத்துக் கிளை பணிமனையிலிருந்து மதுரைக்கு தினசரி அதிகளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதனால் பள்ளி மாணவர்களும், இந்த வழித்தடங்களில் செல்லும் அனைத்து வகையான பயணிகளும் சிக்கன் கோழியின் கழிவுகளின் துர்நாற்றத்தால் மிகவும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இத்துர்நாற்றத்தால் நோய் ஏற்படும் அபாயம் உள்ளதாக பொதுமக்கள் கூறுகின்றனர். ஆகவே இதனைக் கவனத்தில் கொண்டு அன்னை சிவபாக்கியம் மேல்நிலைப் பள்ளி அருகே கொட்டப்பட்டுள்ள சிக்கன் கோழிக் கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இனி அந்த பகுதியில் வியாபாரிகள் கழிவுகளை கொட்ட அனுமதிக்க கூடாது எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வேளாண்மை பல்கலைக்கழகத்துக்கு ஆப்பிரிக்க விஞ்ஞானிகள் குழு வருகை**

**கோவை,**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ஆப்பிரிக்க விஞ்ஞானிகள் குழுவினர் வெள்ளிக்கிழமை வருகை தந்தனர். பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ள வேளாண் விரிவாக்க அணுகுமுறைகள் மற்றும் புதுமையான விவசாய தொழில்நுட்பங்களை அறிந்து, அந்தப் புதுமைகளை மளாவி நாட்டில் பயன்படுத்தி விவசாயத்தை மேம்படுத்துவதே ஆப்பிரிக்க விஞ்ஞானிகள் குழுவின் நோக்கம். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இணைய விரிவாக்க மையம், விவசாய தகவல் மையம், வேளாண் தொழில்நுட்ப தகவல்

மையம், சமுதாய வானொலி மையம், கல்வி ஊடக மையம், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தாவர உயிரியல் மூலக்கூறு துறையின் திசு வளர்ப்பு ஆய்வகம், பசுமைக் குடிலை ஆப்பிரிக்க விஞ்ஞானிகள் குழுவினர் பார்வையிட்டனர். இக் குழுவினர், வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடினர். மேலும், வேளாண்மைப் பல்கலைக்கழகம் கடைப்பிடிக்கும் வேளாண் விரிவாக்க முறைகளான இணைய வேளாண்மை, வேளாண் தொழில்நுட்ப வலைதளம், வல்லுநர் அமைப்பு, வேளாண் அறிவியல் நிலையம் போன்றவற்றை ஆப்பிரிக்க விஞ்ஞானிகள் குழுவினர் தியோமோன், ட்ரஸ்ட் ஆகியோர் பார்வையிட்டு பாராட்டினர். ஆப்பிரிக்க விஞ்ஞானிகள் குழுவை, வேளாண்மைப் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநரகம் சார்பில் பேராசிரியர் ச.கார்த்திகேயன் வரவேற்றார்.

## <u>பழங்குடி விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள்</u>

**கூடலூர்**,

கூடலூர் பழங்குடி விவசாயிகளுக்கு தேயிலை வாரியம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வியாழக்கிழமை வழங்கப்பட்டன. பந்தலூர் ஏலமண்ணா கிராமிய அபிவிருத்தி மையம், கேர்-இந்தியா நிறுவனங்கள் இணைந்து பழங்குடி விவசாயிகளுக்கான காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது குறித்த கருத்தரங்கை நடத்தின. இதில், தேயிலை விவசாயிகளுக்கு கவாத்து இயந்திரங்கள், தேயிலை பைகளை தேயிலை வாரியச் செயல் இயக்குநர் ஆர்.அம்பலவாணன் வழங்கினார். உதகை மத்திய மண் மற்றும் நீர்வள ஆராய்ச்சி மையம் சார்பில் பாக்கு, மிளகு, தேயிலை உள்பட பல்வேறு வகையான நாற்றுகள் வழங்கப்பட்டன. உபாசி ஆராய்ச்சி மையம் சார்பில் நுண் உரங்களும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் மத்திய மண் மற்றும் நீர்வள ஆராய்ச்சி மைய இயக்குநர் ஓ.பி.எஸ்.கோலா, மண்வள பாதுகாப்பு அலுவலர் கண்ணன், தேயிலை வாரிய துணை இயக்குநர் ஹரிபிரசாத், உபாசி ஆராய்ச்சி மையத்தின் முதன்மை விஞ்ஞானி ராமமூர்த்தி, சி.டி.ஆர்.டி.அறக்கட்டளையின் செயல் இயக்குநர் ஆர்.எஸ்.ரெங்கநாதன், கேர் நிறுவன மண்டல இயக்குநர் தேவபிரகாஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## <u>வேளாண் துறை சார்பில் தென்னங் கன்றுகள் விநியோகம்</u>

**குடியாத்தம்**

குடியாத்தம், பேர்ணாம்பட்டு விவசாயிகளுக்கு மானிய விலையில் தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்பட உள்ளன என வேளாண்மை உதவி இயக்குநர் ஈ.ராஜேஸ்வரி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை

விவரம்: தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குடியாத்தம், பேர்ணாம்பட்டு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, நெட்டை மற்றும் குட்டை ரக தென்னங் கன்றுகள் மானிய விலையில் விநியோகிக்கப்பட உள்ளன. தென்னங் கன்றுகள் தேவைப்படும் விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் ஜிப்சம், தார்பாலின்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆகியனவும் மானிய விலையில் வழங்கப்படும் என குறிப்பிட்டுள்ளார் ராஜேஸ்வரி.

## மேகக் கூட்டங்கள் இருந்தாலும் மழை பெய்ய வாய்ப்பில்லை

**நாமக்கல்**,

தற்போதைய வானிலை அடிப்படையில் மேகக் கூட்டங்கள் இருந்தாலும் மழை பெய்வதற்கான வாய்ப்பு இருக்காது என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாள்களுக்கு (ஜூலை 26 முதல் 29ஆம் தேதி வரை) வானம் பொதுவாக, லேசான மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் சனிக்கிழமை மட்டும் ஒரு செமீ மழை பெய்ய வாய்ப்புள்ளது. காற்றின் திசைவேகம் மணிக்கு 7 கிமீ முதல் 8 கிமீ வேகத்தில் மேற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 78.8 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 95 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 43 சதம் முதல் அதிகபட்சம் 76 சதம் வரை இருக்கும். கோழிப் பண்ணையாளர்களுக்கு...: தென்மேற்குப் பருவ மழையின் தாக்கம் தமிழகத்தின் மேல் குறிப்பாக வடமேற்கு மண்டலத்தில் மிகக் குறைவாகக் காணப்படும் சூழல் நிலவுவதால், மேகக் கூட்டங்கள் இருந்தாலும் மழை பெய்யும் நிலை இருக்காது. வெப்ப அதிர்ச்சியற்ற நிலை நிலவினாலும் பகல் வெப்பம் உயர்ந்தும், குறைந்தும் காணப்படுவதால் பண்ணைக் கோழிகளிடம் வெப்ப அயற்சி காணப்படும். ஆகஸ்ட் மாதத்தில் தென்மேற்குப் பருவ மழையால் ஓரளவுக்கு மழையை எதிர்பார்க்கலாம். தொடர்ந்து, காற்றின் வேகத்தால் விரயமடையும் தீவனத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சி எடுக்க வேண்டும். கோழியின நோய் ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், கோழிகள் பெரும்பாலும் மூச்சுக்குழாய் நோய், ஈகோலை கிருமியால் ஏற்படும் நோய்களால் இறந்திருப்பது தெரிய வந்தது. எனவே, பண்ணையாளர்கள் குடிநீரில் ஈகோலை கிருமி உள்ளதா என்பதை ஆய்வு செய்து அதற்கேற்ப குடிநீரில் கிருமிநாசினி மருந்துகளை பயன்படுத்துவதுடன் பண்ணை உயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் பின்பற்றிட வேண்டும். வேளாண் விவசாயிகளுக்கு...: ஆனி, ஆடிப் பட்டத்தில்

மானாவரி மழையில் எள் விதைக்கும் விவசாயிகள் தற்போது மழைக்கு முன் எரு இட்டு (ஏக்கருக்கு 5 டன்) 1 முதல் 2 உழவு செய்து நிலத்தை தயார் செய்து கொள்ளலாம். எஸ்விபிஆர்-1, விஆர்ஐ-2 போன்ற ரக விதைகளை ஒரு ஏக்கருக்கு 2 கிலோ வீதம் தேர்வு செய்து உயிர் உரம் கொண்டு விதை நேர்த்தி செய்து 30ஷ்30 செமீ என்ற இடைவெளியில் ஓரிரண்டு மழைக்குப் பின் விதைப்பை மேற்கொள்ள வேண்டும். ஆனியில் எள் விதைத்த விவசாயிகள் தங்கள் வயல் நுண்ணூட்ட குறைபாடு ஏற்படின் மெக்னீசியம் சல்பேட் அல்லது துத்தநாக சல்பேட்டை ஏக்கருக்கு தலா 2 கிலோ என்ற அளவில் மணலுடன் கலந்து இட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>நிலக் கடலைப் பயிரைக் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு</u>**

**திருச்செங்கோடு,**

மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் பயிர்க் காப்பீடு திட்டத்தின் கீழ், நிலக்கடலைப் பயிரைக் காப்பீடு செய்து கொள்ள விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குநர் நமச்சிவாயம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

திருச்செங்கோடு வட்டாரத்தில் மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண்மை பயிர்க் காப்பீடு திட்டத்தின் கீழ், காரீப் பருவத்துக்கு நிலக்கடலைப் பயிரை காப்பீடு செய்து கொள்ள 48. கைலாசம்பாளையம், தேவனாங்குறிச்சி, கருமாபுரம், கருவேப்பம்பட்டி, மோடமங்கலம், வட்டூர், ஏமப்பள்ளி, கே. புளியம்பட்டி, பட்லூர், சித்தளந்தூர், தோக்கவாடி ஆகிய கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. நடப்பு பருவத்தில் நிலக்கடலை பயிரைச் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இந்தத் திட்டத்தில் பங்கேற்று பிரீமீய தொகையைச் செலுத்தி பயிரைக் காப்பீடு செய்து கொள்ளலாம். தேர்வு செய்யப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், வருவாய் துறையிடமிருந்து சம்பந்தப்பபட்ட கணினி சிட்டா, அடங்கல் சான்றைப் பெற்று தங்களது பகுதிக்கான தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கத்தை அணுகி அதற்கான விண்ணப்பத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து, ஒரு ஏக்கருக்கான பிரீமியத் தொகை ரூ.808-யை செலுத்திக் காப்பீடு செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>வேளாண் பொறியியல் துறையில் பயனற்றக் கருவிகள், இயந்திரங்கள்</u>**

**கிருஷ்ணகிரி**,

வேளாண் பொறியியல் துறையில் உள்ள பயனற்ற விவசாயக் கருவிகளைப் பயன்படுத்துவதால், விவசாயிகளுக்கு எந்த நன்மையும் கிடைப்பதில்லை என விவசாயிகள் புகார் தெரிவித்தனர். கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலர் ராமகவுண்டர் பேசியது:

கடந்த சில மாதங்களுக்கு முன்பு பலத்த காற்றுடன் பெய்த மழையால் பசுமைக் குடில்கள் முற்றிலும் சேதம் அடைந்தன. இதனால், விவசாயிகள் தொடர்ந்து விவசாயம் செய்ய முடியாத நிலை உள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட விவசாயிகள் வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்த இயலாமல் உள்ளனர். எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீண்டும் விவசாயம் செய்யும் வகையில், மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர். அதற்குப் பதில் அளித்த மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ், அதுகுறித்து பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் விவசாயப் பயன்பாட்டுக்குக் குறைந்த வாடகையில் விவசாய இயந்திரங்கள் உள்ளதாக அரசு தெரிவித்தது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்கள், கருவிகள் விவசாயத்துக்கு பயனற்றதாகவும், பழைமையானதாகவும் உள்ளது. மேலும், டிராக்டர்களை வாடகைக்கு கேட்டால் போதிய ஓட்டுநர்கள் இல்லை என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். வேளாண் பொறியியல் துறையால் விவசாயிகளுக்கு எந்தப் பயனும் கிடைப்பது இல்லை என விவசாயிகள் தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டது. மேலும், ஏரிகளுக்கு மழைநீர் வரும் வாய்க்கால்களை ஆக்கிரமித்து கிரானைட் கழிவுகள் கொட்டப்படுவதாகவும், அதனால் ஏரிகளுக்கு நீர் வருவது முற்றிலும் தடுக்கப்படுவதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர். இந்தக் கூட்டத்தில் 15 பயனாளிகளுக்கு ரூ.1.14 லட்சம் மதிப்பில் நலத் திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

## காவிரி உபரி நீரை பயன்படுத்த நீரேற்றுத் திட்டம் தேவை

**சேலம்**,

மழைக் காலங்களில் வீணாகச் சென்று கடலில் கலக்கும் காவிரி உபரி நீரை, சேலம் மாவட்டத்தில் பாசனத்துக்கு பயன்படுத்தும் வகையில் புதிய நீரேற்றுத் திட்டம் கொண்டு வர வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர். சேலம் மாவட்டம், மேட்டூர், நங்கவள்ளி, மேச்சேரி, தாரமங்கலம், கொங்கணாபுரம், ஓமலூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் 100 விவசாயிகள் மாவட்ட

ஆட்சியர் அலுவலகத்துக்கு வெள்ளிக்கிழமை வந்தனர். பின்னர், அவர்கள் காவிரி உபரி நீர் நடவடிக்கைக் குழு சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

இதுகுறித்து அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியது:

காவிரி உபரி நீரை சேலம் மாவட்டத்தின் வறண்ட பகுதிகளுக்கு திருப்பி விட்டு, விவசாயத்துக்கு உதவிட வேண்டும் என்று, கடந்த 30 ஆண்டுகளாக போராடி வருகிறோம். கடந்த ஆண்டு காவிரியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால், 10 நாள்களில் மேட்டூர் அணை நிரம்பியது. அதன் பிறகு வந்த சுமார் 100 டி.எம்.சி. தண்ணீர் வீணாகச் சென்று கடலில் கலந்தது. இதையடுத்து, ரூ.2 ஆயிரம் கோடி செலவில் உபரி நீர் பயன்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப் போவதாக அரசு அறிவித்தது. அதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெறுவதாக கூறப்படும் நிலையில், இதனால், சேலம் மாவட்ட விவசாயிகளுக்கு எந்தவித நன்மையும் இல்லை என்று தெரிய வருகிறது. முல்லைப் பெரியாறில் உள்ள தொழில்நுட்பத்தைப் போன்று மேட்டூர் அணையில் இருந்து நீரேற்றுத் திட்டம் மூலம் தண்ணீரை எடுத்து நங்கவள்ளி, எடப்பாடி, ஓமலூர், தாரமங்கலம், கொங்கணாபுரம், மேச்சேரி, காடையாம்பட்டி ஒன்றியங்களில் உள்ள ஏரி, குளங்களில் தண்ணீரை தேக்கி வைக்கலாம். இதன் மூலம் சுற்று வட்டாரங்களில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் உயரும். அரசின் புள்ளி விவரங்களின்படி கடந்த 2005-ஆம் ஆண்டில் 70.96 டி.எம்.சி., 2006-இல் 42.85 டி.எம்.சி., 2007-இல் மட்டும் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் 7 முறை அணை நிரம்பி 100 டி.எம்.சி.க்கும் அதிகமான நீர் கடலில் கலந்திருப்பது தெரிய வந்துள்ளது. அதேபோல 2008-ஆம் ஆண்டில் 78.15 டி.எம்.சி., 2009-இல் 65.42 டி.எம்.சி., 2013-இல் நூறு டி.எம்.சி.க்கும் அதிகமான நீர் கடலில் கலந்து வீணாகியுள்ளது. எனவே, நீரேற்றுத் திட்டத்தை செயல்படுத்துவதன் அவசியத்தை அரசு உணர்ந்து செயல்பட வேண்டும். அதைப் போலவே காவிரி - சரபங்கா - திருமணிமுத்தாறு நதிகளை இணைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

## <u>திருச்சியில் வரும் ஆக. 16,17,18-ல் விவசாயிகள் சங்க மாநில மாநாடு</u>

**திருச்சி**

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் (இந்திய கம்யூ. சார்பு) 25ஆவது மாநில மாநாடு வரும் ஆக. 16,17,18 தேதிகளில் திருச்சியில் நடைபெறவுள்ளதாக அச்சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலர் வே. துரைமாணிக்கம் தெரிவித்தார்.

திருச்சியில் வெள்ளிக்கிழமை அவர் அளித்த பேட்டி:

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலக் குழுக் கூட்டம் திருச்சியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. சங்கத்தின் மாநிலத் தலைவர் குணசேகரன்

எம்எல்ஏ கூட்டத்துக்கு தலைமை வகித்தார். தமிழ்நாடு பெருமளவுக்கு வறட்சியால் பாதிக்கப்பட்டு விவசாயிகள் மட்டுமின்றி, பொதுமக்களும் குடிநீருக்கே சிரமப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. மழை அளவு குறைந்திருப்பதை வானிலை அறிஞர்கள் எச்சரிக்கையுடன் தெரிவிக்கின்றனர்.

எனவே, தமிழ்நாட்டை முழுவதுமாக வறட்சி மாநிலமாக அறிவித்து, மத்திய, மாநில அரசுகள் போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்க வேண்டும். குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். காவிரி நடுவர் மன்றத்தால் அறிவிக்கப்பட்ட காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் கண்காணிப்புக் குழுவை விரைவில் அமைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறோம்.

வரும் ஆக. 16,17,18 ஆகிய 3 நாள்கள் சங்கத்தின் 25ஆவது மாநில மாநாடு திருச்சியில் நடைபெறவுள்ளது. மூன்று நாள்களும் உறையூர் கைத்தறி நெசவாளர் திருமண மண்டபத்தில் நடைபெறும் பிரதிநிதிகள் மாநாட்டில் 600 பேர் பங்கேற்கின்றனர். 16ஆம் தேதி மாலை பேரணி- பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

சங்கத்தின் அகில இந்தியப் பொதுச் செயலர் அதுல்குமார் அஞ்சான், இந்திய கம்யூ. மாநிலச் செயலர் தா. பாண்டியன், மூத்த தலைவர் ஆர். நல்லகண்ணு உள்ளிட்டோரும் மாநாட்டில் பங்கேற்றுப் பேசுகின்றனர் என்றார் துரைமாணிக்கம். பேட்டியின்போது, சங்கத்தின் மாநிலத் துணைச் செயலர்கள் த. இந்திரஜித், பி.எஸ். மாசிலாமணி, மாவட்டச் செயலர் அயிலை சிவசூரியன் ஆகியோர் உடனிருந்தனர்.

## <u>மேட்டூர் அணையை ஆகஸ்ட் மாதத்தில் திறக்க வேண்டும்</u>

**தஞ்சாவூர்**,

டெல்டா மாவட்ட சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையை ஆகஸ்ட் மாதத்தில் திறக்க வேண்டும் என தஞ்சாவூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர். மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு ஆட்சியர் என். சுப்பையன் தலைமை வகித்தார். கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

பெரமலக்குடி எஸ். ராமநாதன்: குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் அக்டோபர் முதல் வாரத்தில் அரைவைப் பருவத்தைத் தொடங்க வேண்டும். அதற்குள் 3 ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வரும் இணை மின் உற்பத்தி பணியையும் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பா சாகுபடிக்குத் தொடர்ந்து தண்ணீர் தடங்கலின்றி வருமாறு மேட்டூர் அணையைத்

திறக்க வேண்டும்.பொன்னவராயன்கோட்டை வா. வீரசேனன்: கடைமடைப் பகுதியான மடிகை, நாட்டுச்சாலை கிராமங்களில் இப்போதுதான் ஆற்றில் பாலம் கட்டுகின்றனர். இந்தப் பணி முடிவதற்கு சில மாதங்கள் ஆகும். இந்தப் பணியால் ஆற்றில் தண்ணீர் செல்ல வாய்ப்பில்லை. இதை உடனடியாக முடிக்க வேண்டும். மேலும், கடைமடைப் பகுதி வரை தண்ணீர் செல்லும் வகையில் தூர் வாரும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். புனல்வாசல் வி.ஏ. சவரிமுத்து: தென்னை விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகத் தென்னை மரங்களிலிருந்து பதநீர் இறக்கவும், அவற்றை மற்றொரு இடத்துக்குக் கொண்டு சென்று விற்கவும் அரசாணைப் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி பதநீர் இறக்கவும், விற்பனை செய்யவும் அனுமதி வழங்க வேண்டும். காவிரி டெல்டா விவசாயிகள் சங்கத் தலைவர் ஏ.கே.ஆர். ரவிச்சந்தர்: ஆழ்குழாயில் இப்போது உவர்நீர் வருகிறது. கர்நாடக அணைகள் நிரம்பி வரும் நிலையில், மேட்டூர் அணையிலும் நீர்மட்டம் உயருகிறது. எனவே, டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையை ஆக. 10-ம் தேதிக்குள் திறக்க வேண்டும். ஆம்பலாப்பட்டு அ. தங்கவேல்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் சம்பா சாகுபடிப் பணிகளைத் தொடங்கும் வகையில், ஆக. 1-ம் தேதி தண்ணீர் திறந்துவிட வேண்டும். டெல்டா மாவட்டங்களில் வறட்சி நிலவும் நிலையில் மேட்டூர் அணையைத் திறந்துவிட்டால்தான் சம்பா சாகுபடிக்கான நாற்றுவிடும் பணிகளை மேற்கொள்ள முடியும். சுவாமிமலை சுந்தர விமல்நாதன்: மத்திய அரசு அளித்த நியாயம் மற்றும் ஆதார விலையாக சுமார் ரூ. 25 கோடியை கரும்பு விவசாயிகளுக்கு திருஆரூரான், அம்பிகா சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டும். இதை இரு ஆலைகளும் வழங்காமல் நிலுவையில் வைத்துள்ளன. இதை வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பனசை அரங்கன் பேசியது: குடந்தை ஆறுகள், மண்ணியாற்றில் தூர் வாரும் பணி மேற்கொள்ளப்படவில்லை. இவற்றில் தூர் வாரினால் விவசாயத்துக்குப் பயன்படும். இந்தப் பணியும் தலைப் பகுதி, வால் பகுதியை விடுத்து இடைப்பட்ட பகுதியில் மட்டும் மேற்கொள்ளப்படாமல் முழுமையாக மேற்கொள்ளப்பட

வேண்டும்.

<u>"160 **பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் தரம் பார்க்கும் இயந்திரம்**'</u>

**பெரம்பலூர்**

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 175 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில், 160 சங்கங்களுக்கு பால் தரம் பார்க்கும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது. பெரம்பலூர்

மாவட்டம், ஆலத்தூர் வட்டம், செட்டிகுளம் சின்ன வெங்காய வணிக வளாக கூட்ட அரங்கில், வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்துக்கு தலைமை வகித்து, விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு விளக்கம் அளித்த ஆட்சியர் மேலும் பேசியது: மக்காச்சோளம், பருத்தி, சின்ன வெங்காய உற்பத்தியில், பெரம்பலூர் மாவட்டம் தமிழ்நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது. இங்கு சுமார் 7,000 ஹெக்டேர் பரப்பளவில் சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது. உற்பத்தியான வெங்காயத்துக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக, வெங்காய விற்பனை வணிக மையம் மற்றும் காய்கறி குளிர்பதனக் கிடங்கு தொடங்கப்பட்டுள்ளது. இங்கு அனைத்து மாவட்ட வெங்காய வியாபாரிகளும் ஏல முறையில் விவசாயிகளின் வெங்காயத்தை விற்பனை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பருத்தி, சின்ன வெங்காயம், மக்காச்சோளம் ஆகியவற்றை விற்பனை செய்ய உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், மத்திய அரசின் கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்து தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிறுவனங்களில் விவசாயிகள் தங்களது பங்குத்தொகையாக செலுத்தும் தொகைக்கு ஈடாக, அதே அளவு தொகை மத்திய அரசால் வழங்கப்படும். இந்நிறுவனம் உருவாக்கப்படுவதன் மூலமாக விளைபொருள்களை உரிய விலைக்கு விற்பனை செய்வதுடன், விவசாயத்துக்கு தேவையான உரம், விதைகள் மற்றும் பூச்சி மருந்து உள்ளிட்ட இடுபொருள்களை குறைந்த விலையில் விற்பனை செய்ய இயலும். பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 175 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் 160 சங்கங்களுக்கு பால் தரம் பார்க்கும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இதில் ஏதேனும் குறைபாடுகள் ஏற்பட்டால், கூட்டுறவு சங்கத்தில் தகவல் பலகையில் தெரிவிக்கப்பட்டுள்ள துணை பதிவாளர் எண்ணை தொடர்பு கொள்ளலாம். கடந்த ஆண்டு 5 ஹெக்டேர் பரப்பளவில் பந்தல் அமைத்து காய்கறிகள் சாகுபடி மேற்கொள்ள அரசு மானியம் வழங்கப்பட்டது. நிகழாண்டு மானியம் பெற விரும்பும் விவசாயிகள் தோட்டக்கலை துணை இயக்குநரை தொடர்புகொள்ளலாம். வியாழக்கிழமைகளில் நடைபெற்று வரும் ஏல விற்பனை, திங்கள் மற்றும் வியாழக்கிழமையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார் தரேஸ் அஹமது. கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் வி. ராஜன்துரை, சார் ஆட்சியர் ப. மதுசூதன் ரெட்டி, வேளாண் இணை இயக்குநர் வெ. அழகிரிசாமி, மின்வாரிய கண்காணிப்பு பொறியாளர் வளர்மதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆர். கனகசபை உள்பட பலர் பங்கேற்றனர்.

**"ரப்பர் நடவுக்கு மானியம் பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்'**

**குலசேகரம்**

குமரி மாவட்டத்தில் ரப்பர் மரங்களை மறு மற்றும் புது நடவு செய்யும் விவசாயிகள் மானியம் பெற விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து ரப்பர் வாரிய குலசேகரம் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: ரப்பர் மறு மற்றும் புது நடவு செய்யும் சிறு விவசாயிகளுக்கு ரப்பர் வாரியம் மானியம் அளித்து வருகிறது. 25 சென்ட் முதல் 5 ஹெக்டேர் வரை ரப்பர் புது மற்றும் மறு நடவு செய்யும் விவசாயிகள் மானியம் பெறத் தகுதியானவர்கள். ஹெக்டேருக்கு ரூ. 25 ஆயிரம் என்ற அளவில் மானியம் வழங்கப்படுகிறது. இதற்கான விண்ணப்ப படிவத்தை ரப்பர் வாரிய மார்த்தாண்டம் அல்லது குலசேகரம் அலுவலகங்களை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை டிசம்பர் மாத இறுதிக்குள் ரப்பர் வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும் என செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>7 **தீவனக் கிடங்குகளுக்கு வைக்கோல் விநியோகிக்க விவசாயிகளுக்கு அழைப்பு**</u>

**திருநல்வேலி**,

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அரசின் 7 தீவனக் கிடங்குகளுக்கு வைக்கோல் விநியோகம் செய்ய, விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்போருக்கு அரசின் மானிய விலையில் வைக்கோல் விநியோகம் செய்வதற்காக மானூர், மேலநீலிதநல்லூர், குருவிகுளம், ராதாபுரம் ஆகிய 4 இடங்களில் உள்ள அரசு கால்நடை மருந்தகங்களில் தீவனக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர பாவூர்சத்திரம், கடையநல்லூர், நான்குனேரி ஆகிய கால்நடை மருந்தகங்களிலும் கூடுதலாக 3 தீவனக் கிடங்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் கிடங்குகளில் தரமான உலர்ந்த வைக்கோல் கொள்முதல் செய்து 21 கிலோ கட்டுகளாகக் கட்டி, வைக்கோல் போர் அமைத்து வாரம் 15 டன் வீதம் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு வழங்க விருப்பம் உள்ள விவசாயிகள், ஒரு கிலோ வைக்கோல் விலையை குறிப்பிட்டு மூடி முத்திரையிட்ட விலைப்புள்ளிகளை வழங்கலாம். ஆகஸ்ட் 1ஆம் தேதி மாலை 3 மணி வரை விலைப்புள்ளிகளை வழங்கலாம். வழங்கல் ஆணை பெற்ற விவசாயிகள் 3 நாள்களுக்குள் விநியோகத்தைத் தொடங்க வேண்டும். இந்த விலைப்புள்ளி விண்ணப்பங்களை ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ, பதிவு அஞ்சல் மூலமோ அளிக்க வேண்டும். பெறப்படும் விலைப்புள்ளிகள் அனைத்தும் ஆகஸ்ட் 1 ஆம் தேதி மாலை 4 மணிக்கு மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் திறக்கப்பட்டு குறைந்த விலைப்புள்ளி குறிப்பிட்ட விவசாயிகளுக்கு ஆணை

வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு திருநெல்வேலியில் 0462- 2500489, 2340715, 2541454 என்ற தொலைபேசி எண்களிலும், அம்பாசமுத்திரத்தில் 04634-260070, தென்காசியில் 04633- 227744 என்ற தொலைபேசி எண்களிலும் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

## திட்டப் பணிகள்: வேளாண் துறை இயக்குநர் ஆய்வு

**உளுந்தூர்பேட்டை**

உளுந்தூர்பேட்டை அருகே ஏ.சாத்தனூர் கிராமத்தைச் சேர்ந்த அஜிஸ் நகரில் மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகளை வேளாண்மைத் துறை இயக்குநர் மு.ராஜேந்திரன் வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தார். எ.சாத்தனூர் ஊராட்சிக்கு உள்பட்ட அஜிஸ் நகரில் என்.எல்.சி. நிறுவனம் வழங்கிய தரிசு நிலங்களை மேம்படுத்தி சாகுபடி செய்வதற்கு வேளாண்மைத் துறை மற்றும் விழுப்புரம் மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையால் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளை வேளாண்மை இயக்குநர் மு.ராஜேந்திரன் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது தரிசாக கிடந்த 100 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களில் உள்ள முட்புதர்களை அகற்றி கோடை உழவு செய்திருப்பதையும், ஒரு பண்ணைக் குட்டை அமைத்திருப்பதையும் பார்வையிட்டார். பின்னர் அங்கு விவசாயிகளுடன் கலந்துரையாடி தரிசு நிலங்களை வரும் பருவ மழையை பயன்படுத்தி சாகுபடிக்குச் கொண்டுவர வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும் அப்பகுதி விவசாயிகள் 5 பேருக்கு உளுந்து விதைகளை மானியத்தில் வழங்கினார். இந்த ஆய்வின்போது விழுப்புரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ராஜாமணி, வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்), உளுந்தூர்பேட்டை வேளாண்மை உதவி இயக்குநர் கருணாநிதி, மாவட்ட நீர்வடிப் பகுதி உதவிப் பொறியாளர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.